★ விலை ரூபா 1-00

# ஈழநாடு
THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 பங்குனி 12 ஜ. ஆகிர் 10 இதழ் 44

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 26—3—83

**மலிவு விற்பனை**

உடனடியாக விஜயம் செய்யுங்கள்

ஏற்றுமதித் தரமான (Export Quality) இருவயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கான ஆடைகள் (Ready Made Garmants)

**இன்றும் நாளையும் மட்டும்**

நியாயமான விலையில் விற்கப்படும். குறைந்த அளவு கையிருப்பு மட்டுமே உள்ளது

BLAKES - 7,
PERSONAL SERVICE,
81, K K. S ROAD,
KOKUVIL. 6678

## "இதுவரை 13கோடிரூபா:
## யாழ். பல்கலைக்கழகம் புறக்கணிக்கப்படவில்லை!"

(கொழும்பு)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு 1977–1982-ம் ஆண்டுக்காலங்களுக்கிடையில், மூலதனச் செலவுகளாக ஐந்துகோடி அறுபது லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டது. ஏற்கனவே யாழ். பல்கலைக்கழகக் கட்டத்துக்கு ஆறு கோடி ரூபா வழங்கப்பட்டது இவ்வாண்டும் ஒரு கோடி அறுபது லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண பல்கலைக்கழகம் புறக்கணிக்கப்படுகிறது என்ற கூற்றில் எவ்வித உண்மையுமில்லை என்று பிரதிஉயர்கல்வி அமைச்சர் திரு. அத்தநாயக்க நேற்றும் பாராளுமன்றத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

உயர் கல்வி அமைச்சின் நிதி ஒதுக்கீடு விவாதத்திற்குப் பிரதி அமைச்சர் பதிலளித்
(8ம் பக்கம் பார்க்க)

# வடபகுதி 'விளைபொருட்களை
# வெளிநாடு அனுப்பத் திட்டம்!

## ஏற்றுமதியாளர்களுடன் நடந்த ஆலோசனை

(இ. கந்தசாமி)

வடபகுதி விவசாய உற்பத்திப் பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் திட்டம் சம்பந்தமாக பாராளுமன்றத்திலுள்ள எதிர்க்கட்சித்தலைவரின் அலுவலகத்தில் தமிழ், சிங்கள, முஸ்லிம் ஏற்றுமதியாளர்களுடன் நடாத்தப்பட்ட ஆலோசனைக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் பலனளிக்கும் பட்சத்தில், வடக்கிலுள்ள விவசாயிகள் உத்வேகத்தையும், உற்சாகத்தையும் பெறுவார்கள் என்று நம்பப்படுகிறது.

வடபகுதியிலுள்ள வீடுகளில் இப்போது தேங்கிக்கிடக்கும் வெங்காயத்துக்கு, யாழ்ப்பாணத்து மாம்பழத்துக்கும், மிளகாய், இராசவள்ளிக் கிழங்கு, 'ஹொலிபிளவர்' போன்ற உற்பத்திகளுக்கும் நல்லதொரு அதிர்ஷ்டம் ஏற்படுமென்று நம்பப்படுகிறது.

எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா, மாவட்ட அபிவிருத்தி சபைத்தலைவர் திரு. சு. நடராசா, முல்லைத்தீவு எம். பி திரு. எக்ஸ் எம். செல்லத்தம்பு, நல்லூர் எம்.
[8ம் பக்கம் பார்க்க]

## தொழில் வங்கிமுறையை
## ஒழிப்பது பற்றி
## அரசு ஆலோசிக்கும்!

(கொழும்பு)

தொழில் வங்கி முறையை ஒழித்துவிட்டு திறமை அடிப்படையில் தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என்று நேற்றுமுன் திருகோணமலை எம். பி. திரு. ஆர். சம்பந்தன் தெரிவித்ததுக்கு அரசாங்கத்தரப்பில் இசைவான பதில் கிடைத்தது.

திட்ட, திட்ட அமுலாக்கல் அமைச்சின் நிதி ஒதுக்கீடுகள் மீதான குழுநிலை ஆய்வின் போது திருகோணமலை எம். பி. பிரஸ்தாப யோசனையைத்
(8-ம் பக்கம் பார்க்க)

## "பல்கலைக்கழக பிரச்னையில் அரசு தலையிடமாட்டாது"
### - கல்வி அமைச்சர்

(கொழும்பு)

'பல்கலைக்கழகங்கள் சுயமாக இயங்கும் சபைகள். இவற்றின் விவகாரங்களில் அரசு தலையிடமாட்டாது' என்று கல்வி அமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்கா நேற்று உயர்கல்வி அமைச்சு நிதி ஒதுக்கீடு விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

''எந்த வகையான பிரச்னைகளையும் பல்கலைக்கழக அதிகாரிகளே தலையிட்டுத் தீர்த்து வைப்பார்கள்'' என்றும் அமைச்சர் தமது பேச்சில் குறிப்பிட்டார்.

''மாணவர்கள் பாதுகாக்கப்படவேண்டும். இரத்தக் களறி ஏற்படுவது அனுமதிக்கப்படமுடியாது'' என்றும் திரு. ரணில் கூறினார்.

## "பொலிஸாரைத் தேவதைகள் என்று அரசு நம்புகிறது"
### பாராளுமன்றத்தில் 'சிவா'

(கொழும்பு)

''பொலிஸார் உண்மை பேசும் தேவதைகள் என்று அரசு நம்புகிறது. மாணவர்கள் பேசுவதில் உண்மையில்லை என்று ஒருபக்கச்சார்பாக அரசு நினைத்துச் செயல்படுகிறது.'' என்று தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவரும், நல்லூர் எம். பி. யுமான திரு. எம். சிவசிதம்பரம் நேற்றுப் பாராளுமன்றத்தில் உயர் கல்வி நிதி ஒதுக்கீடு விவாதத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. சிவசிதம்பரம் மேலும் பேசுகையில்,

எந்த ஒரு விஷயத்திலும் தீர்க்கமான தீர்மானமான முடிவை எடுப்பவர் என்று பாராட்டப்படும் ஜனாதிபதி பல்கலைக்கழக மாணவர்கள் விஷயத்தில் மட்டும் நீண்டகாலமாக ஒரு தீர்வு எடுக்காமல் இருப்பது கவலைக்குறியதாகும். வளாகத்தில் ஒரு பொலிஸ் நிலையமே குடிகொண்டிருப்பது வருந்தத்தக்கதொரு விஷயமாகும். பதட்ட நிலையை தணிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்றார்.

எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில் யாழ்-கொழும்பு பல்கலைக்கழகப்பிரச்னை தீர்ந்து விட்டதாக நினைத்தேன். ஆனால் ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகப் பிரச்னை நீடித்துக் கொண்டே இருக்கிறது.

இந்தக் குழப்பத்தில் வெளியார் தலையீடு இருப்பதாக எண்ணுகிறேன். இது ஒரு தொற்று நோய் மற்ற இடங்களுக்கும் பரவி விடுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது'' என்றார். [இ]

## விவாதத்தில் கலக்கவில்லை

(கொழும்பு)

மாவட்ட அமைச்சர்களுக்கு நிதி ஒதுக்கீடு சம்பந்தமான குழு நிலை விவாதத்தில் நேற்று கம்யூனிஸ்ட் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் கலந்து கொள்ளவில்லை.

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் துந்துபி வருடம் பங்குனித்திங்கள் 14ம்-நாள் (28-3-1983) திங்கட்கிழமை

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்

பகல் 2-34 முதல் 3-17 மணி வரையுமுள்ள கடக லக்கினமும் உத்தர நட்சத்திரமும் கூடிய சுபமுகூர்த்தத்தில் நடைபெறும்.

### ஆனந்தகுமார் - குகாம்பிகை

திருமணத்தில் கலந்து ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி கனகசபை
திரு. ஸ்ரீஜெயராமச்சந்திரா
118, சிவன் பண்ணை ரோட்,
யாழ்ப்பாணம்.

திரு. திருமதி
சிவானந்தசுந்தரம்
படவாட புலம்,
அல்வாய் தெற்கு
அல்வாய்.

(6662)



## திருமண திருமுகம்

காலம்: 28-03-83 திங்கட்கிழமை
காலை 11-00 மணி முதல் 1-00 மணிவரை சுபவேளை

இடம்: சுன்னாகம் மயிலணி கந்தசாமி கோவில்

மணமகன்: மகேந்திரன்(மகம்) (தொழிலதிபர் ஸ்ருடியோ டிக்கா)

மணமகள்: கலாரஞ்சிதம் பி. எஸ். சி. (கலா) ஆசிரியை ஸ்ரீ கதிரேசன் மகாவித்தியாலயம், நாவலப்பிட்டி.

அனைவரையும் அன்புரிமைதழுவி அழைக்கின்றோம்

மணமகன் இல்லத்தில் வரவேற்புபசாரம் 29-03-83 மாலை 5 மணி

திருமதி என். மயில்வாகனம்
'துவாரகை' உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

திரு. திருமதி. கே. சுப்பிரமணியம்
245/1, சேர். பொன். இராமநாதன் வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

(6633)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

2 முதிரைக் கண்ணாடி அலுமாரிகள். 7' X 7' X 15'' நீ இம்மானியல். 201/1, மூன்றும் குறுக்குத்தெரு, அரசடி ஒழுங்கை, யாழ்ப்பாணம் 6685

வியாபார நிலையங்களுக்கு வேண்டிய அலுமாரிகள், கிருக்கைகள், காரியாலய மேசை மற்றும் இரும்புக்கேடர் (H-IRON) பழைய பலகைகள், கதவு நிலைகள் காரியாலய நேரங்களில் பார்வையிடலாம். 836-340, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 6653

மானிப்பாய் சுகாதாரக்கந்தோருக்கு அருகாமையில் 2 பரப்பு காணி, வீட்டுடன் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: வ. க.மகாலிங்கம், M O H லேன், மானிப்பாய் 6647

911 பேமன்ஸ் பெண்ஸ் லொறி. தனிப்பாவிப்பு புதிதாக பொடி அடித்துக்கொண்டு வரப்பட்டுள்ளது. உடனடியாக விற்பனைக்குண்டு. செ. பீற்றர்ஸ் ஐஸ்பக்ரறி, முல்லைத்திவு. 6642

100 வீதம் மறுசீரமைக்கப்பட்ட HONDA - C - 90 1979-ம் ஆண்டு மொடல் மோட்டார் சைக்கிள் மிகச் சிறந்த நிலையில் விற்பனைக்குண்டு. விசேஷ விலைக்கழிவு கொடுக்கப்படும். தொடர்பு கொள்க: N சுசீந்திரராஜா, இல: 3, கோவில் வீதி, (வேதக்கோவில் அருகில்) நுணாவில் மேற்கு, நுணாவில், சாவகச்சேரி. 6624

''கலிவு விற்பனையும், பரிசு விநியோகமும்'' எங்கே?- புதூர் நாகதம்பிரான் கோவிலில். எப்போது? 28-3-83 பொங்கலன்று, மின்கலவற் விளம்பர வாகனத்தில் மின்கலவற் உற்பத்திகளை இனாம் பொருட்களுடன் மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம் மேலுறைகளை வைத்திருப்பவர்கள் அங்கு விளம்பர வாகனத்தில் கொடுத்துப் பரிசில்களையும் பெற்றுக்கொள்ளலாம். மின்கலவற் விளம்பரப்பகுதி. 6621

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம்- ஸ்ரான்லி வதியில் 2¼ பரப்புக் காணியுடன் 2 கடைகளும் 2வீடுகளும், கே. கே. எஸ். வீதி, சி. எஸ். கே.கட்டடத்திற்கு முன்பாக ஒரு கடையும்.

நாவற்குளி- நெற்களஞ்சியத்திற்கருகே 56 பரப்புக்காணி.

அரியாலை- கொழும்புத்துறை-துண்டி வீதியில் 100 பரப்புக்காணி.

ஆனைக்கோட்டை- 3ம் கட்டையடியில் தென்னைகளுடன் 13பரப்புக் காணி.

கோண்டாவில்- தபாற்கந்தோருக்கு அண்மையில் 4பரப்புக்காணி.

மாங்குளம்-மார்க்கட் முன்பாக 2 கடைகள் 3 பரப்புக்காணியுடன்.

தொடர்பு:-

**மல்ரி சேவிசஸ்,**

தடன்லப் ஸ்ரோர்ஸ், 234, 446) ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி-23541

(6661

## விற்பனைக்கு

4 அறைகள், மாபிள் நிலம், சாற்றுடி, பைப் வசதிகள் கொண்ட நவீன புதிய வீடு 1 பரப்பு 5குளி காணியில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: 834, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 6629

''மிற்சுபிசி'' - சக்தி இரண்டு சில்லு உழவுயந்திரம் நல்ல நிலையில் ரீலர், பெட்டியுடன் விற்பனைக்குண்டு. அப்புக்குட்டி சிவனேஸ்வரன் (கண்ணன்) மடத்தடி, சண்டிலிப்பாய். 6643

யாழ். ஸ்டான்லி வீதியில், ஸ்ரீதர் தியேட்டருக்கு அருகில் இரண்டு பரப்பில் 2000 சதுர அடி கொண்ட சகல வசதிகளும் அடங்கிய, காலியான நிலையில் புதியவீடொன்று விற்பனைக்குண்டு 82, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். 6858

## FOR SALE

40 Lachams ocean shore land, four miles from Jaffna, good water Highest offer over 50 000 Apply to: Advt No; 6619, C/o Eelanadu, Jaffna. 6619

EL Minor DHV 12'' B/W T.V New 3 piece suits, Broad neck. British latest style. A. Culanayagam, Hindu College Road, Urumparai. [6641]

## தேவை

அச்சக வேலைகள் பழக ஆர்வமுள்ள இளைஞர் தேவை. 5-4-83க்கு முன்னர் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 6652 C/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 6652

யாழ்ப்பாணத்தில் வசிப்பவரும், இலேப்பாறியவருமான ஒரு காரிச் சாரதி தேவை. விண்ணப்பிக்கவும்: விளம்பர இல. 6639, C/o ஈழநாடுலிமிட், யாழ்ப்பாணம்! 6639

## சேவை

கண்ணியமான கல்யாணப் பொருத்தங்களுக்கும், சிக்கனமான சிறந்த வரவேற்புபசார ஒழுங்குகளுக்கும் - மல்ரி சேவிசஸ், டன்லப் ஸ்ரோர்ஸ், 234 (446) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி- 23541. (6660)

## வகுப்புகள்

கேக் ஐசிங், Hair Styles, பூக்கள் செய்தல், தையல் வேலை வகுப்புக்கள் ஆரம்பம்: 1-4-83. 141, ஆஸ்பத்திரிவீதி (வேம்படி சந்தி) யாழ்ப்பாணம் (காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துக்கு அருகாமையில்). 6584

## பயிற்சி

3 மாத எலக்றிக்கல் வயறிங் டிப்ளோமா பகல் நேர - வார இறுதி பயிற்சி வகுப்புகள் 28 - 03 - 1983 ஆரம்பமாகின்றது. Institute of Engineering Technology 11, B Momsac Building Stanley Road, Jaffna 6607

## ஏல விற்பனவு

காரைநகர் மாப்பாணவூரி தி. க. பெரியதம்பியிடம் 1-4-1981 முதல் 10-03-1982 வரை அடைவு வைத்து மீட்கப்படாத நகைகள் 11-04-1983 காலை 9-30 மணி தொடக்கம் அதே அடைவு கடையில் வைத்து பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

வ. சி மகாதேவன்
ஏலவிற்பனையாளர்

6 3, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 6618

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில்

திருகோணமலை முதலியார் வீதி, இல: 51ஐச் சேர்ந்த காலஞ்சென்ற பிறின்ஸ் பேட்றம் இராஜேந்திரம் சோமநாதர் பெண் செல்வராணி என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்,

மரணமெய்தியவர்

பிறின்ஸ் பேட்றம் இராஜேந்திரம் சோமநாதர் இல: 51, முதலியார் வீதி, திருகோணமலை.

மனுதாரர்.

மரணசாதன )
நியாயாதிக்கம் ) இல.564

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதனவழக்கு மேலேபெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப்பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1983 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 31 ஆந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி
**பதிவாளர்**

1983ஆம் ஆண்டு பங்குனி மாதம் 22 ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது. (6645]

## ஏப்ரல் மாதம் பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பம்

1. எலக்றிக்கல் என்ஜினியரிங் ரூபா 450/-
2. மோட்டார் மெக்கானிசம் (Motor Mechanism) ரூபா 510/-
3. வெல்டிங் ரூபா 600/-

கட்டணம் மூன்று தவணைகளில் கட்டலாம்.

நிர்வாகி,
**பற்றீசியன் இன்ஸ்ரிரியூட்,**
59, சென். பற்றிக்ஸ் ரேட், யாழ்ப்பாணம்.
[6609]

## தமிழ், ஆங்கில தட்டச்சு, சுருக்கெழுத்து

புதிய இறுதிப்பிரிவு ஆரம்பமாகின்றது:
ஆரம்பம்:- 30-3-83 காலை 9-00
குறிப்பு:- ஆங்கில விரிவுரை இலவசம்.
பிற்மன் பரீட்சைக்கு அனுமதிபெற்ற ஸ்தாபனம்.
அ. பரீட்சை—ஆகஸ்ட் 27th, 28th
G. A. G 1st In COMMERCE
வகுப்புகள் நடைபெறுகின்றன.
விபரங்கட்கு:-

**SCIENCE HALL**

182 1/5, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
[வெலிங்டன் பின்புறம்] 6559

வருடமொன்றுக்கு உங்கள் பணத்திற்கு

## 26% தொடக்கம் 30% வரை

வட்டி கொடுக்கப்படும்.
குறைந்த தொகை ரூபா 1000/-
எந்த நேரமும் அறிவித்தலின் பின்
முழுப் பணத்தையும் திருப்பிப் பெறலாம்
விபரங்களுக்கு:
**யாழ். பிறப்பட்டி ரேட்ஸ் லிமிற்.**
3, நவீனசந்தை (மேல்மாடி)
யாழ்ப்பாணம்.
போன்: 23698

விவசாயப் பெருமக்களே!
[illegible] வியாபாரிகளே!!

## இதோ ஒரு நற்செய்தி

அமோக விளைச்சலைத் தரக்கூடிய

## இயற்கை உரம்

(ORGANIC FERTILIZER)
பாதுகாப்பானது! மிக நம்பிக்கையானது!.
அறிமுக விலையில்-
குறிப்பிட்ட அளவே கையிருப்பு.
வியாபாரிகளுக்கு விசேட கழிவு:
விபரங்களுக்கு உடன் விண்ணப்பிக்கவும்.
விளம்பர இல. 6637
C/O ஈழநாடு லிமிட்., யாழ்ப்பாணம். [6637]

உ
சிவமயம்

அன்புடையீர்!

## திருமண அழைப்பு

நிகழும் துந்துபி வருடம் பங்குனித் திங்கள் 14-ம் நாள் 28-3-83 திங்கட் கிழமை பிற்பகல் 2 மணி 34 நிமிஷம் தொடக்கம் 3 மணி 17 நிமிஷம் வரை வரும் உத்தர நட்சத்திரமும் கடக லக்கினமும் கூடிய சுபமுகூர்த்தத்தில்

| | |
|---|---|
| எமது புத்திரன் திருநிறைச்செல்வன் **பாலசேகரம்** அவர்களுக்கும் | எமது சிரேஷ்ட்ட புத்திரி திருநிறைச்செல்வி **ஜெயதேவி** அவர்களுக்கும் |

இறைவன் திருவருளால் தொண்டமனாறு செல்வச் சந்நதி திருமுருகன் ஆலயத்தில் திருமணஞ்செய்யப் பெரியோர்களால் நிட்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் குடும்ப சமேதராய் சுற்றஞ்சூழ வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

| | |
|---|---|
| இங்ஙனம் | இங்ஙனம் |
| தங்கள் நல்வரவை எதிர்பார்க்கும் | தங்கள் நல்வரவை எதிர்பார்க்கும் |
| திரு. திருமதி | திரு. திருமதி |
| நா. கந்தசாமி | சி. வே. சிவசுப்பிரமணியம் |
| தம்பதிகள் | தம்பதிகள் |
| ஜெயராம்ஸ் இல்லம், தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை. | உரிமையாளர்:- சுப்பிரமணியம் சோடாக் கொம்பனி, வல்வெட்டித்துறை. |
| உரிமையாளர்:- ஜெயராம் ஜெயகௌரி புடவை மாளிகை, சுன்னாகம். | ராஜா ஸ்டோர்ஸ், 67, 69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். |

(தனிப்பட்ட அழைப்புகள் இல்லை) 6654

# மத்திய - மாநில அரசு உறவுபற்றி ஆராய தனிநபர் ஆணைக் குழு

## சகல கட்சிகளும் பரவலாக வரவேற்பு

புதுடில்லி, மார்ச், 25

மத்திய அரசுக்கும், மாநில அரசுகளுக்கும் இடையேயுள்ள பிரச்னைகளை ஆராயவும், இவற்றுக்கிடையே சுமுக நிலையைத் தோற்றுவிக்கவுமெனத் தனிநபர் ஆணைக் குழு ஒன்று நியமிக்கப்படவுள்ளது. இத்தகவலை இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி பாராளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

'சர்க்காரியா' ஆணைக் குழு என்ற இத்தனிநபர் ஆணைக் குழு அமைக்கப்படவிருப்பதை மாநில முதலமைச்சர்கள் பலரும், எதிர்க்கட்சிப் பிரமுகர்கள் பலரும் வரவேற்றுள்ளனர்.

ஆந்திர முதலமைச்சர் திரு. என். டி ராமராவ் இதுபற்றிக் கூறுகையில், அவசியமான தொன்று, உரிய வேளையில் அமைக்கப்பட்டுளதென்ருர்.

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் கருத்து வெளியிடுகையில், மத்திய அரசின் கமிஷன் அமைக்கும் முடிவு சிறந்ததொன்று என்றும், இந்தியாவின் மொத்த நலனைக் கருத்திற் கொண்டே பிரதமர் இந்திரா இக்கமிஷனை அமைக்க முன்வந்துள்ளார் என்றும் கூறினர்.

தமிழகமுன்னுள் முதலமைச்சரும், தி. மு. கழகத் தலைவருமான திரு. மு கருணாநிதி, இந்திரா காங்கிரஸ் பிரமுகரும், தமிழக முன்னுள் முதலமைச்சருமான திரு.பக்தவத்சலம் ஆகியோரும் இத்தனிநபர் கமிஷன் அமைப்பதனை வரவேற்றுள்ளனர்.

கேரள முன்னுள் முதலமைச்சர் திரு. ஈ கே. நைனர் தனிநபர் கமிஷன் அமைப்பதனைவரவேற்றுள்ள அதேவேளை அக்கமிஷன்பற்றி நன்கு மத்திய அரசு பரிசீலிக்கவேண்டுமென்றும், அதன் நடவடிக்கைகள் விரிவாக்கப்படவேண்டுமென்றும் விருப்பந் தெரிவித்தார். மகாராஷ்டிரா, கர்நாடகா, மேற்கு வங்காளம் முதலமைச்சர்களும், கமிஷன் அமைப்பதனை வரவேற்றனர்.

பிரதமர் இந்திராகாந்தி இத்தனிநபர் ஆணைக்குழு அமைக்கப்படவிருப்பதனை பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் நேற்றுத் தெரிவித்தார். அத்துடன் மாநில அரசுகளுக்கும், மத்திய அரசுக்குமிடையிலான உறவுகள் நல்ல நிலையிலேயே இருந்துவந்துள்ளனவென்றும், ஒரு சிலரே பிரச்னைகள் இருந்து வருவதாகக் கூறிவருகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார். (கி)

## இனந்தெரியாத 200 எலும்புக்கூடுகளுக்கு விசேட நல்லடக்கம்!

லண்டன், மார்ச். 25

இனந்தெரியாத இருநூறு பிரித்தானிய மாலுமிகளின் எலும்புக்கூடுகள் கடந்த வருடம் கடலிலிருந்து மேலெடுக்கப்பட்ட கப்பலான 'மேரிரோஸ்'யிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்த எலும்புக்கூடுகள் கடற்படை மரியாதைகளுடன் கப்பல் மேலெடுக்கப்பட்ட கடல் வலயத்தை அண்டிய கரையோரப்பகுதியில் நல்லடக்கம் செய்யப்படும்.

எட்டாவது ஹென்றி மன்னரின் போர்க்கப்பலே 'மேரிரோஸ்'ஆகும். இக் கப்பல் 1545ம் ஆண்டு பிரெஞ்சு கடல் முற்றுகையொன்றை எதிர்த்தபோது மூழ்கடிக்கப்பட்டது. அப்போது அக்கப்பலுடன் எழுநூறு கடற்படை மாலுமிகளும் மூழ்கி மரணமடைந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (கி)

## ஆயுதங்களுடன் அநாதரவான நிலையில் கார்

(மட்டக்களப்பு)

அம்பாறையிலுள்ள ஒரு டாக்டருக்குச் சொந்தமான கார் ஒன்று ரயில் நிலையத்திற்கருகில் அநாதரவான நிலையில் நிற்கக்கண்டு பிடிக்கப்பட்டது. காரில் ஆயுதங்கள் காணப்பட்டதுடன் இரத்தக் கறையும் காணப்பட்டது.

பிபிலையில் வங்கிக் கொள்ளைக்கு இக்கார் பயன்படுத்தப்பட்டிருக்கலாமென்று கருதப்படுகிறது.

## சிரமதானம் மூலம் திருத்தம்

(மாவிட்டபுரம்)

பற்றைகளும், செடிகளும் சூழ்ந்து பயங்கரமான நிலையிலிருந்த வசாவிளான் குட்டியப்புலம் பிள்ளையார்காடு மயானம் சிரமதானம் மூலம் செப்பனிடப்பட்டுள்ளது.

வசாவிளான் கிராமசேவையாளர் திரு. யோ. அருளானந்தத்தின் ஏற்பாட்டின் பேரில் சுமார் 75 தொண்டர்கள்வரை இச்சிரமதானத்தில் பங்குபற்றினர்.

சிரமதானத்தில் ஈடுபட்டவர்களுக்கு பலரும் சிற்றுண்டிகள் வழங்கி உற்சாகப்படுத்தினர்.

தொடர்ந்தும் இம்மாதம் 27ம் திகதி இந்த சிரமதானப் பணியை மேற்கொள்வதென முடிவெடுக்கப்பட்டுள்ளது.

## பிரதமர் திருமதி இந்திரா காந்திக்கு 'ஒலிம்பிக்கோல்ட் ஓடர்' விருது!

புதுடில்லி, மார்ச், 25

சர்வதேச 'ஒலிம்பிக்'கமிட்டியின் கௌரவ விருதான 'ஒலிம்பிக் கோல்ட் ஓடர்' விருது இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்திக்கு வழங்கப்படுகின்றது.

புதுடில்லியில் சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் எண்பத்தி ஆறுவது கூட்டத்தொடர் நடைபெறுவதை முன்னிட்டே இந்த விருது அவருக்கு வழங்கப்படுகிறது.

'ஒலிம்பிக் கோல்ட் ஓடர்' விருதைப் பெறும் எட்[illegible]ாவது நபர் திருமதி இந்திரா காந்தியாவார். அத்துடன் இந்த விருதைப் பெறும் முதலாவது பெண்மணியும், முதலாவது ஆசிய நாட்டவரும் இவரென்பது குறிப்பிடத்தக்கது.

புதுடில்லியில் நடைபெறும் இந்த சர்வதேச ஒலிம்பிக் கூட்டத்தில் சுமார் எண்பது நாடுகளைச் சேர்ந்த அங்கத்தவர்கள் கலந்துகொள்கின்றனர்.

## பொலிஸ் - பொதுமக்கள் நட்புறவுக்கு நடவடிக்கை

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை பொலிஸ் பிரிவில் பொலிசாருக்கும்-பொதுமக்களுக்குமிடையில் நட்புறவை வளர்க்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

காங்கேசன்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. கே. ஆர். இராமச்சந்திரன் பொலிசாருக்கும் பொதுமக்களுக்குமிடையில் நெருங்கிய தொடர்பைவளர்ப்பதால் குற்றச் செயல்களை ஒழிக்கவும், பொதுமக்களுக்கு சிறந்த பாதுகாப்பை வழங்கவும், பொலிசாரின் கடமையைச் சிறப்பாகச் செய்யவும் வழி பிறக்குமெனக் கருதி இதற்கானநடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்.

கிராமங்களில் பொலிஸ்-பொதுமக்கள் நட்புறவுக் கருத்தரங்குகளும், விழிப்புக் குழுக்கள் அமைக்கும் வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் சமய வைபவங்களை பொலிசாரும்-பொதுமக்களும் இணைந்து கொண்டாடவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எதிர்வரும் சித்திரை வருடப் பிறப்பையொட்டி பொலிஸ்-பொதுமக்கள் நட்புறவு விழாவை நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## கிராமோதய சபைத் தலைவர்

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பழை வடமேற்கு கிராமோதயசபைத்தலைவராக திரு. பொ. இராஜேந்திரம் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இளவாலைக்கு இந்துஇளைஞர் சங்க தலைவரும் இளவாலை காடிவலை இந்துஇளைஞர் சனசமூகநிலைய உறுப்பினருமான இவர் ஓர் சமூகசேவையாளராவார்.

இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம் தெல்லிப்பழை யூனியன்கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரான இவர் இளவாலைப்பகுதி பயிர்ச்செய்கை உத்தியோகத்தருமாவார்.

## “வளர்முக நாடுகளின் முதுகெலும்பை முறிக்கும் ஆயுதப் போட்டி!”

### பிரிட்டிஷ் விமர்சகர் கருத்து!

லண்டன். மார்ச். 25

இன்று வளர்முக நாடுகள் அனுபவிக்கும் கஷ்டங்களுக்குப்பிரதான காரணங்களில் ஒன்று ஆயுதப்போட்டிதான் என்று பிரிட்டிஷ் பத்திரிகையான 'கார்டியன்' எழுதியுள்ளது

'கார்டியன்' பத்திரிகை வெளியிட்டுள்ள தகவல் தொடர்பாக விமர்சனம் செய்த பிரிட்டிஷ் விமர்சகர் ஒருவர், 'கார்டியன்' இம்முறை உண்மையை எழுதியபோதும், ஆயுதப் போட்டியைத்தூண்டிவிட்டு, வளர்முக நாடுகள் அனுபவிக்கும் பொருளாதார கஷ்டங்களில் லாபமடைய முனைபவர் எவர் என்பதைக் குறிப்பிடத்தவறிவிட்டது, என்று தெரிவிக்கிருர்.

இராணுவமயமாவது என்பது வளர்முக நாடுகளின் முதுகெலும்பை முறிக்கும் வேலையாகும். உண்மையில் இந்நாடுகள் தீர்வுகாணவேண்டிய பிரச்னைகளை ஏராளமாகக்கொண்டுள்ளன. என்று இந்த விமர்சகர் சுட்டிக்காட்டுகிருர்.

ஐ நா. நிபுணர்களின்மதிப்பீட்டின் பிரகாரம் வளர்முக நாடுகளில் மூன்றுபேரில் ஒருவரே மருத்துவரிடம் செல்கிருர். லட்சக்கணக்கான மக்கள் வறுமையில் வாடுகிருர்கள். ஏராளமான நாடுகளில் படிப்பறிவின்மை இன்னமும் நிலவுகிறது. பட்டினியை ஒழித்துக்கட்டவும், நோய்கள், தொற்றுநோய்கள், கல்வியறிவின்மை ஆகியவற்றை அகற்றவும். வீடில்லா நெருக்கடிக்கு தீர்வு காணவும். வாழ்க்கைச் செலவின் உயர்வைத் தடுக்கவும். விசை வளங்களை அபிவிருத்தி செய்யவும் வளர்முக நாடுகளுக்கு ஏராளமான நிதிகள் தேவையாகவுள்ளது.

அதே வேளையில் இவை ஆயுதங்களைக் கொள்முதல் செய்யவும் இராணுவ அமைப்புகளை உருவாக்கவும் அளவற்ற பணத்தைக் கொட்டிவருகின்றன. இதன் விளைவாக, வளர்முகநாடுகளின் ராணுவ செலவீனங்கள் ஆண்டுதோறும் அதிகரித்துச்செல்கின்றன வாழ்க்கைத்தரம் பெரும் வீழ்ச்சியடைந்துள்ளது.

வளர்முக நாடுகளுக்கு மேற்குலகம் வழங்கும் உதவியின் அளவைக்காட்டிலும் பலமடங்கு அதிகமான தொகையை உலகம் இன்று ராணுவத்துறையில் செலவு செய்கிறது. உலகின் ஆயுதச் செலவீனங்கள் இப்படி அதிகரித்திருக்கையில், உதவிக்கான தொகை அதிகரிக்கும் என்று வளர்முகநாடுகள் எதிர்பார்க்கமுடியாதுதான்என்றும் இந்தப்பத்திரிகையாளர்எழுதிகிருர், (கி)

## இன்று 8ம் திருவிழா

(யாழ்ப்பாணம்)

சங்கரத்தை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய எட்டாம் திருவிழா இன்று நடைபெறவுள்ளது. இதனையொட்டி விசேட மேளக் கச்சேரிகளும், சங்கீத கதாப்பிரசங்கமும் இடம்பெறவுள்ளன.

(வெ)

## ஆங்கில ஆசிரியர்களுக்கு போதனைப் பயிற்சி வகுப்பு

(மாவிட்டபுரம்)

வடமாநில கல்விப் பிரதேசத்தில் உள்ளபாடசாலைகளின் ஆங்கில ஆசிரியர்களுக்கு ஆங்கிலப் போதனை தொடர்பான பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவுள்ளன

இரண்டாம் தவணை தொடக்கம்இடம்பெற உள்ள இப்பயிற்சி வகுப்பில் வடமாநிலத்திலுள்ள சகலபாடசாலைகளின் ஆங்கில ஆசிரியர்களும் கலந்து பயிற்சிபெறுவார்கள்.

கடந்த ஆண்டு ஆங்கில மொழிப்போதனை தொடர்பான பயிற்சியை வடமாநிலத்திலுள்ள 60 பாடசாலைகளின்ஆங்கில ஆசிரியர்கள் பெற்றிருந்தனர்.

மேற்படி பயிற்சியில் புதிய முறையில் ஆங்கில மொழியை போதிப்பது தொடர்பாக ஆசிரியர்களுக்கு போதனைகள் அளிக்கப்பட உள்ளது

வடமாநில கல்வித்திணைக் ஆங்கில வட்டாரக்கல்வியதிகாரி திரு. இ க. குலசேகரன், ஆங்கில சேவைக்காலப்பயிற்சி ஆலோசகர்கள் ஆகியோர் இதற்கான ஒழுங்குகள் மேற்கொண்டுள்ளனர்.

## தளபாடம் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

"மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்தின் தளபாடப் பற்றாக்குறையை உணர்ந்து இவ்வித்தியாலயத்திற்கு 2500 ரூபா பெறுமதியான தளபாடங்களை செய்து கொடுப்பதற்கு மல்லாகம் கிராம அபிவிருத்திச்சங்கம் முன்வந்துள்ளது"

இவ்வாறு மல்லாகம் கிராம அபிவிருத்திச்சங்கத் தலைவர் திரு எஸ் ஸ்ரீபாஸ்கரன் மல்லாகம் கனிஸ்ட வித்தியாலயத்திற்கு தளபாடம்வழங்கும் வைபவத்தில் உரையாற்றுகையில் கூறினர்.

வித்தியாலய அதிபர் திரு க. வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் அவர்தொடர்ந்து பேசுகையில்:

"இவ்வித்தியாலய சிறுவர்களுக்கு குடிநீர்பருகுவதற்கு வசதியாகமின்சார நீர்இறைக்கும் இயந்திரமொன்றையும் அன்பளிப்புச் செய்யமுடிவுசெய்துள்ளோம் என்றும் கூறினர்.

மூன்று வாங்குகளை அன்பளிப்புச் செய்தமல்லாகம் பனம்பொருள் உற்பத்தி சங்கத்தலைவர் திரு வி,செல்லத்துரையும் இவ்வைபவத்தில் உரையாற்றினர்.

திருமதி செ நடராசா பாராட்டுரைவழங்கினர் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் பிரம்மஸ்ரீ மு நாகேந்திர சர்மா நன்றியுரை கூறினர்.

### மணிவாக்கு

ஒரு சிறந்த கவிஞன் ஒரு சோலையின் மிகச்சிறந்த பயன்களையெல்லாம் அனுபவித்துவிடுகின்றான். ஆனால், அந்தச் சோலையின் சொந்தக்காரனோ பழங்கள், மட்டைகள் இவைகளை மட்டுமே வீட்டுக்குச் சுமந்து செல்லுகின்றான்.

— தோரோ

## நமது நோக்கு

### பனைப் பண்பாடு

இந்நாட்டில் காணப்படும் பனை, தென்னை, பாக்கு மரங்கள் மனித பண்பாட்டுக்குரிய பண்புகளை வளர்ப்பதில் தங்களுக்குரிய பங்கை அளிக்கின்றன. இயற்கைவளம் மனித பண்பாட்டுக்கு இன்றியமையாத பண்டம்.

இதனை வற்புறுத்தினிளக்கியவர் இலக்கியப் பேராசிரியர் ஜோன் வால்டர் பிக்னெல் என்ற அமெரிக்கப் பேரறிஞர்.

யாழ்ப்பாணக் கல்லூரியின் உத்தம அதிபர் வணக்கத்துக்குரிய ஜோன் பிக்னெல் அவர்களின் ஏகபுத்திரனாகிய பேராசிரியர் வால்டர் பிக்னெல் ஹன்டி பேரின்பநாயகம் ஞாபகார்த்த பேருரையை அங்கு ரார்ப்பணம் செய்துவைத்த போது இக்கருத்தை வழங்கியிருப்பது இன்று பனைவளத்தைப் பெருக்க நடவடிக்கைகள் எடுக்கும் அரசின் கவனத்துக்குரியது.

யாழ்ப்பாண மாவட்டம், பனை வளரும் தமிழ் மாவட்டங்கள் அனைத்தும் பனைப் பொருளாதாரத்தில் பெருமளவிற்கு நம்பிவாழ முடியுமானால் இன்றைய இக்கட்டு நிலையைச் சமாளிக்கும் ஆற்றல் மிக்க மக்களாக வாழும் பாக்கியம் பெற்றிருப்பார்கள்.

பிரதேச அபிவிருத்தி அமைச்சுக்குரிய வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடுகள் குறித்து குழுநிலை விவாதத்தில் வழங்கப்பட்ட ஆலோசனைகள், இ பகுதிகளில் மீண்டும் பனைப்பண்பாடு உதயமாக வழிகாட்டுகின்றன.

தமிழ்நாடு பனம்பொருள்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் வருடம் ஐம்பது கோடி ரூபாவுக்கு மேற்பட்ட தொகையை அந்நியச் செலாவணியாகப் பெறுகிறது. அங்குள்ள பல மாவட்டங்கள் பொருளாதாரம் பனைவளத்தில் தங்கியுள்ளது.

தமிழ் நாட்டுப் பனைத்துறை நிபுணர், பனம்பொருள் அபிவிருத்திச்சபையின் அழைப்பை ஏற்று இங்கு வந்து உதவிய பல நுண்ணிய கருத்துக்களை நாம் கிரகிக்கவேண்டுமானால், ஒரு அடிப்படை உண்மையை நாம் உணர்ந்தே ஆகவேண்டும்.

கைத்தொழில் வளமும், ஆங்கில ஆட்சியில் ஆதிக்கம் பெற்ற ஏற்றுமதி இறக்குமதிக் கொள்கைகளும் எம்முன்னோர்கள் கற்பகதரு என்று கனம் பண்ணிய பனையை ஒதுக்கி வைப்பதில் வெற்றி கண்டன.

குடியிருக்கும் வளவிற்கும், நாம் இந்நாட்களில் இடம்பட இடும் வீடுகளுக்கும் பனைமரம் ஒரு அருவருப்பான காட்சியாகக் கருதி வாழ்பவர்கள் இன்றும் பலர் காணப்படுகின்றனர். பனையை அழித்து விளையைத் தேடுகின்றனர்.

இந்தப் போலிக்கௌரவ மனப்பான்மை பொருளல்லவற்றைப் பொருளென்று எண்ணும் பேதைமை என்பதை மேனாட்டு நாகரிகப் புயலில் சிக்கித் தப்ப வழி தெரியாது தவிக்கும் மூடர்கள் இன்றும் அறியாமலிருக்கின்றனர்.

நாங்கள் சுதந்திரமக்கள் என்று கருதக்கூடிய லட்சணங்களுள் பனை வேளாண்மை மீண்டும் முதலிடம் பெறவேண்டும். இயற்கையோடியைந்த வாழ்வை நாம் மீண்டும் பண்படுத்தவேண்டும்.

அழகான வீட்டைக்கட்டி அதற்கு முன் நறுமணங்கமழும் மல்லிகை, ரோசா-குரோட்டனுங்கள் ... பூங்கா ஒன்றை அமைப்பதில் ஒரு பெரும்வாய்ப்பு மில்லை.

ஆனால் அவ்வித 'இந்திர' வாழ்வுக்கு, வளவில்,தோட்டத்தில் எவ்வித பராமரிப்புமின்றி ஓங்கி வளர்ந்து, தலையால் மட்டுமல்ல, ஒவ்வொரு அங்கத்தாலும் எம்மை வளர்த்தெடுக்கும் பனை மிகக் கௌரவமான இடம்பெறவேண்டும்.

இதற்குரிய மனமாற்றம் தானாகவருவது கடினம்; கைவிட்ட நிலையை மீண்டும் புனரமைப்பதற்கு இன்று பற்றுக்குறைவாகக் காணப்படும் தர்மசிந்தனை போதாது;

'அம்மையாரால்' எங்களுக்கு ஊதியம் உண்டு என்ற நம்பிக்கை ஏற்படுமாயின் நிச்சயம் பனை நடுகை வெற்றியளிக்கும்.

பாராளுமன்றத்தில் கூறப்பட்ட ஆலோசனை பனை நடுகைக்கு மானியம் வழங்க வேண்டுமென்பதே! அத்துடன், புதிய இனங்களை உருவாக்குதல், பனை ஏறும் சிரமத்தைத் தவிர்க்கவல்ல சின்ன மரவர்க்கங்கள், குறுகிய காலத்தில் பயன்தரும் புதுப்புது வர்க்கங்கள், அதற்கேற்ற விஞ்ஞான ஆராய்ச்சிகளால் அறியமுடியும்.

இவற்றை விஸ்தரிக்கமுடியுமானால் வருடம் முழுவதும் வேலைவாய்ப்பு அளிக்கவல்ல பலவித விவசாய, கைத்தொழில் திட்டங்கள் உருவாகுமென நம்பலாம்.

கிராமங்கள் நகரத்தை முன்மாதிரியாகக் கொண்டு, சுதேசவாழ்க்கை முறையை ஒழித்து, கண்டதே காட்சியாக, பாவனையாளர்களின் பாதாள உலகத்தின் பல வகைப்பட்ட ஆடம்பரங்களுக்குப் பலியாகும் அளவிற்கு கிராமிய அபிவிருத்தி திசை திருப்பப்பட்டிருக்கின்றது.

கிராமங்கள் 'பட்டிக்காடாக' இருக்கவேண்டுமென்பதல்ல எமது வாதம். கிராமிய வாழ்வு பட்டினங்களில் வாழும் 'போலிமனிதரின்' சத்தற்ற உணவை ஒழித்து பதநீர், பசுமோர், பனாட்டு, ஒடியலில் சமைக்கப்படும் புளிக்கஞ்சி பிட்டுப் போன்ற அமிர்த உணவு வகைகள் பட்டினமக்களின் 'மேசை'யில் இடம் பெற வழி காட்டும் வளம்பெற்ற வாழ்வாக மாறவேண்டும்.

பனை வளத்தில் உருவாகும் மனித ஆளுமை சமுதாயவியலின் ஆராய்ச்சிக்குரிய பெருவிடயமென்பதை அறிக.

# 'அமரர் ஹன்டி பேரின்பநாயகத்துடன் யாழ்ப்பாணத்தில் உருவாகிய நட்பு பனை போன்றது'

## பேராசிரியர் ஜோன் வால்டர் பிக்னெல் உரை

(யாழ்ப்பாணம்)

"பூரணப்பட்ட மனிதனின் பண்பாடு அவன் எங்குவாழ்ந்தாலும், எந்தக்காலத்தில் வாழ்ந்தாலும் ஒற்றுமைப்பட்ட பண்புகளுடையனவாக காணப்படுகின்றது. நாட்டின் இயற்கை இதில் முக்கிய இடம் வகிக்கிறது".

இவ்வாறு யாழ்ப்பாணக் கல்லூரியின் காலஞ்சென்ற அதிபர் வண. ஜோன் பிக்னெலின் புதல்வனான பேராசிரியர் ஜோன் வால்டர் பிக்னெல் சொக்குவில் இந்துக்கல்லூரியில் இடம்பெற்ற அமரர் ஹன்டி பேரின்பநாயகத்தின் ஞாபகார்த்தப் பேருரையைத் தொடங்கிவைத்து 'பண்பாட்டின் அடிவேர்கள்' என்னும் விடயம்பற்றி உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"பண்பாட்டின் வளர்ச்சிக்கு மூன்று அடிப்படை காரணிகளுண்டு. அவை யாவன இயற்கை, நூல்கள், செயல்களென்பனவாகும். எனக்கு இந்த ஞாபகார்த்த உரைக்கு நடுநாயகமாக விளங்கும் ஹன்டி பேரின்ப நாயகத்துடன் ஒரு சில ஆண்டுகளுக்கே நேரடிப் பழக்கம் இருந்தது அது கால கட்டத்தில் மிகப்பெரும்விருட்சமாக வளர்ந்தது மெய்.

"1936ம் ஆண்டில் புதுமணத்தம்பதிகளாகிய நாம் எனது தகப்பனார் ஜோன்பிக்னெல் வட்டுக்கோட்டையில் சந்தித்த பொழுது வரவேற்புபசாரம் அளிப்பதில் ஹன்டி பேரின்பநாயகம்முன்னின்றார். 47வருடங்களின் பின் இன்று வந்த நான் 1936ம் ஆண்டு இறந்தகப்பனாரையும்1977ம் ஆண்டு காலமான ஹன்டி பேரின்பநாயகத்தையும் என்றும் சந்திக்கவில்லை. இருப்பினும் அமரர் ஹன்டிபேரின்பநாயகத்துடன் உண்டான நட்பு யாழ்ப்பாணத்தில் காணப்படும் நீண்டவளையாத அசையாத பனைபோல வளர்ந்திருக்கிறது. இந்தரகசியத்தை என்னுடைய தகப்பனார் எனக்கு அக்காலத்திலேயே விளக்கிவைத்தார்

"யாழ்ப்பாணத்தில் காணப்படும் மூன்று நெடிய சொப்பிலாத மரங்களாக பனை, தென்னை, பாக்கு ஆகியன காணப்படுகின்றன. இம்மூன்றிலும் பனையை முளையிலே நட்டு அது பயிராகவந்தால் தானாகவே வளரும். தென்னைக்கு அடிக்கடி தண்ணீர்விட வேண்டும், பாக்குமரத்திற்கு குறையாதது 10வருடங்கள் தண்ணீர்விட வேண்டும்.

"எனவே ஹன்டி பேரின்பநாயகத்துடன் யாழ்ப்பாணத்தில் உருவான நட்பு பனை போன்றது" என்றார்,

[வெ]

# கலையரசு நினைவாக ஒரு நாடக அரங்கு வேண்டும்

"கலையரசு சொர்ணலிங்கம் நினைவுப் பணிக் குழு" யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமையின் கீழ் உருவாக்கப்பட்டிருப்பதாகவும், அது 1988-1989ல் வரும் கலையரசரின் நூற்றாண்டு விழாவையொட்டி 6 ஆண்டுத் திட்டமொன்றை உருவாக்கி அதன் முதற்கட்டமாக யாழ். திறந்த வெளியரங்கிற்கு 'கலையரசு சொர்ணலிங்கம் அரங்கு' எனவும், ஆனைக்கோட்டை-நவாலி பிரதான வீதிக்கு 'கலையரசு சொர்ணலிங்கம் வீதி' எனவும் பெயரிடவேண்டுமென்று சம்பந்தப்பட்ட நிர்வாகத்தினரைக் கேட்டிருப்பதாகவும், 20-03-83ந் திகதிய 'ஈழநாடு' இதழ்மூலம் அறிந்து அகமகிழ்வு அடைகிறோம். கலையரசரின் பெயரை நினைவில் நிற்கச்செய்யும் அம்முதல் நடவடிக்கையைப் பாராட்டி வரவேற்கின்றோம்.

கலையரசரின் நினைவுப் பணி தொடர்பான 6 ஆண்டுத் திட்டம்பற்றிய மேலும் விபரங்கள் இன்னும் தெரியவில்லை.

எனினும், இச்சந்தர்ப்பத்தில் அவரின் நினைவு தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என எதிர்பார்ப்பது தவறாகாது.

யாழ். நகரைப் பொறுத்தவரையில் நாடகங்களை அரங்கேற்ற சிறந்த மண்டபங்கள் இல்லாதது ஒருகுறையாகும். இருக்கும் மண்டபங்களுக்கும் பெருந்தொகைப் பணத்தை வாடகையாகக் கொடுத்தே நாடகங்களை அரங்கேற்ற வேண்டிய சூழ்நிலை இங்கு நிலவுகிறது.

மேலும், யாழ். திறந்த வெளியரங்கைப் பொறுத்தவரையில் மழைகாலத்தில் நாடக அரங்கேற்றம் செய்ய முடியாததுடன், மூடிய மண்டபங்களில் போல் சிறந்த ஒலியமைப்பையும் ஏற்படுத்த முடியாது.

மேலும், முன்னர் அங்கு பௌர்ணமி கலை நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டு நாடகங்கள் மேடையேற்றப்பட்டு வந்தன. இன்று அவை நடைபெறுவதில்லை.

எனவே, ஈழத்துத் தமிழ் நாடகத் துறையின் தந்தை என மதிக்கப்படும் கலையரசரின் நினைவாக ஒரு நாடக அரங்கை நிறுவுவதே அவருக்கு உண்மையான நினைவாக-ஆக்கபூர்வமான நடவடிக்கையாக அமையுமென அவரது அபிமானிகள் கருதுகின்றார்கள்.

இவ்விதம் ஒரு நிலையம்-அமைப்பு அமையும்போது, தற்போது நாடகக் கலைஞர்களுக்குப் பயிற்சியளித்துவரும் நாடக அரங்கக் கல்லூரியையும் இந்நிலையத்திலேயே இயங்கச் செய்யலாம். அத்துடன், இத்தகைய ஓர் அமைப்பின் மூலம் நாடக மற்றும் நாடகப் பிரதிப் போட்டிகளையும் ஏற்பாடு செய்யக்கூடியதாகவிருக்கும்.

நாட்டின் பல பாகங்களில் இயங்கிவரும் பல நாடக மன்றங்களையும் இந்த அமைப்பின் மூலம் ஒன்றிணைத்து, அம்மன்றங்கள் மூலம் நாடகங்களை மாதாந்தம் அரங்கேற்றச் செய்யலாம்.

இந்நிலையத்தை அமைப்பதற்குக் கலையுள்ளம் கொண்ட

5-ம் பக்கம் பார்க்க)

### தவக்கால நற்சிந்தனை



## மற்றவர்களுக்காக வாழ்வோம்

யேசு தம் வாழ்நாட்களில் பல அருங்குறிகளைச் செய்தார். பலரைக் குணமாக்கினார். அவர் செய்த ஒவ்வொர் செயலும் சொன்ன ஒவ்வொர் சொல்லும் ஒரு பொது நோக்கிற்காகவே அமைந்திருந்தது. ஆனால் அவரையே கொலைத் திட்டம் போட்டு நிறைவேற்றினார்கள். உண்மையையும், நீதியையும் நிலைநாட்ட விரும்புவோரை சமூகம் இன்றும்தான் தாக்கி மட்டம்தட்டி விடுகிறது.

ஒரு பொது நோக்கிற்காக ஒரு உயரிய குறிக்கோளுக்காக, உண்மை உரிமை நீதி, நேர்மை என்பவற்றை நிலைநாட்ட சமூகத்தில் இருந்து துணிந்து நிற்போர் மீது நாம் பல பழிகளையும், பாவங்களையும், கடமைகளையும் போட்டுவிட்டு நாம் விலகி நின்று விடுகிறோம். ஆனால் இவர்கள் அனுபவிக்கும் துன்பத்தைவிட பன்மடங்கு துன்பத்தை யேசு நமக்காக சுமந்தார். யேசுவின் அடிச்சுவட்டைப் பின்பற்றும் நாம் என்றுமே மற்றவர்களுக்காக வாழ கற்றுக் கொள்வோம்.

அருட்செல்வன் ம. ரூபன்

### ஓடவில்லை

கடந்த 20-3-83 ஞாயிற்றுக் கிழமை ஈழநாடு பத்திரிகையில் சென்றல் எதிர் சென் ஜோன்ஸ் கல்லூரிகளுக்கிடையில் நடைபெற்ற கிரிக்கட் போட்டிசம்பந்தமாக பிரசுரிக்கப்பட்டிருந்த செய்தியில் 'மத்தியஸ்தர்கள் ஓட்டம்" என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இவ் விளையாட்டுப்போட்டியில் மத்தியஸ்தம் வகித்த இருவருள் நானும் ஒருவன். அப்போட்டியின்போது ஆதரவாளர்கள் அத்துமீறி பிரவேசித்தது உண்மை. ஆனால் நான் (மத்தியஸ்தம் வகித்த டி. எம். வேதாபரணம் ஓடவில்லை ஆகவே இருமத்தியஸ்தர்களும் ஓடினார்கள் என்று செய்தி வெளியிடப்பட்டிருப்பது தப்பான அபிப்பிராயத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் எனக்கு மிகுந்த கவலையையும் அளிக்கின்றது.

டி.எம்.வேதாபரணம்
கரவெட்டி.

## மக்கள் கருத்து

### மின்சாரம் எப்போ வரும்?

சோழங்கன் சனசமூக நிலைய வீதிக்கு 1982ம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் பணம் ஒதுக்கப்பட்டு மின்னிணைப்பு நடைபெற்றது. மின்னிணைப்பு நடைபெற்று ஐந்து மாதங்களாகியும் இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை. இது சம்பந்தமாக உடுப்பிட்டி பாராளுமன்ற உறுப்பினருடன் தொடர்புகொண்டபோது மின்சார சபையின் கவலையீனமும், சோம்பேறித்தனமும் என்று கூறுகின்றார். இவ்வாறு மின்சாரசபை கவலையீனமாக இருக்கக்கூடாதென்று சோழங்கன் சனசமூக நிலையமும், மக்களும் விரும்புகின்றனர்.

செ. குலேந்திரன்
செயலாளர்
சோழங்கன்
சனசமூக நிலையம்,
கரணவாய் தெற்கு.

### அபிவிருத்திசபை

# 'மாவட்ட பாராளுமன்றமாக செயல்பட வேண்டும்!'

## சபையில் நீலன் வலியுறுத்து சட்டத்தைத் திருத்தவும் கோரிக்கை

(கொழும்பு)

"பனம்பொருள் அபிவிருத்தி சபை, சீ-நோர் நிறுவனம் போன்ற தனிப்பட்ட முறையிலான தொழில் நிறுவனங்கள் யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி சபையின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்படவேண்டும். இதேபோன்று ஏனைய மாவட்ட அபிவிருத்தி சபைகளும் தனிப்பட்ட தொழில் நிறுவனங்களை நிர்வகிக்க வழிசெய்யவேண்டும்.

வட்டுக்கோட்டைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு நீலன் திருச்செல்வம் நேற்றுமுன்தினம் உள்ளூராட்சி அமைச்சின் நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரைநிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

மாவட்ட அபிவிருத்தி சபைகளுக்கென மாவட்ட நிதியம் ஒன்று இருக்கவேண்டும். அரசாங்க சேவை போன்று மாவட்ட சேவைகள் பிரிவு ஒன்றிருக்கவேண்டும். இவை இரண்டும் இச்சபைகள் திறம்படச்செயல்படுவதற்கான அத்திவாரமாக அமையும் என்று திரு நீலன் வலியுறுத்தினார்.

வரவு-செலவுத் திட்டத்தில் மாவட்ட அபிவிருத்தி சபைகளுக்கென மாவட்ட நிதியம் ஒதுக்கப்படவில்லை. இச்சபைகள் தாங்களே அபிவிருத்தித் திட்டங்களை வகுத்துச் செயல்படுவதற்கான அறிவும் வழங்கப்படவேண்டும். வியாபார மொத்த விற்பனை வரிமூலம் கிடைக்கும் வருமானத்திலும் தேசிய லொத்தர்கள் மூலமும் கிடைக்கும் வருமானத்திலும் அபிவிருத்தி சபைகளுக்கு நிதி கிடைக்க வழிசெய்யவேண்டும் என்று வட்டுக்கோட்டை உறுப்பினர் வலியுறுத்தினார்.

அபிவிருத்தி என்றால் பொருளாதார அபிவிருத்தியைமட்டும் குறிப்பாகக் கருதக் கூடாது. கலை கலாசார சமூக அடிப்படையிலான அபிவிருத்திகளையும் அது குறிக்கும். இவைகளைப் பேணுவதற்கான திட்டங்களை உருவாக்கி செயல்படுத்தும் அதிகாரமும் இச் சபைகளுக்கு வழங்கப்பட வேண்டும்.

மாவட்ட அபிவிருத்திசபை மாவட்ட பாராளுமன்றமாக அமையவேண்டும். அதன் விவாதங்கள் அடங்கிய அறிக்கைகள் (ஹன்சார்ட்) வெளியிடப்பட வேண்டும். மாவட்ட கஸட்கள், மாவட்ட வரவு-செலவுத் திட்டம் போன்றவை இருக்கவேண்டும்.

ஜனநாயகம் பலம்பெற்றுச் செயல்படுவதற்கு மாவட்ட அபிவிருத்தி சபை நிர்வாகத்தில் மறுமலர்ச்சி ஏற்பட வேண்டும். இதற்கேற்ப மாவட்ட அபிவிருத்தி சபைகள் சட்டங்களில் திருத்தம் செய்யப்படவேண்டும். இதனை பிரதம மந்திரி அவர்களே பொறுப்பேற்றுச் செய்யவேண்டும்."

இவ்வாறு திரு. நீலன் திருச்செல்வம் குறிப்பிட்டார். [இ]

### கூட்டணி சிபார்சு செய்தவர்களில்

# 16 பேருக்கும்கூட வேலை வழங்கப்படவில்லை!

## சபையில் அமிர் கவலை

(கொழும்பு)

"தமிழர்விடுதலைக் கூட்டணியின் பதினாறு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பதினாறு பிரம் வேலை வங்கிப் படிவங்கள் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களுக்குப் போன்று வழங்கப்பட்டன. ஆனால் த. வி. கூட்டணி எம். பிக்களால் சிபார்சு செய்யப்பட்ட விண்ணப்பங்களில் 16 பேருக்காகினும் வேலை வழங்கப்படவில்லை"

இவ்வாறு எதிர்க்கட்சித்தலைவர் திரு அ. அமிர்தலிங்கம் பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"வேலை வங்கி விடயத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் புறக்கணிக்கப்பட்டது குறித்து கடந்த ஆண்டு மார்ச்சில் ஜனாதிபதியைச் சந்தித்து முறையிட்டோம். இதனையடுத்து தமிழ் பிரதேசங்களான பட்டிருப்பு, திருமலை, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் ஏனைய மாவட்டங்களில் போன்றே வேலை வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டுமென்று ஜனாதிபதி தெரிவித்தார். இது குறித்து சுற்றறிக்கையொன்றையும் வெளியிட்டார். ஆனால் அச்சுற்றறிக்கையின்படி எதுவும் இதுவரை நடைபெறவில்லை.

இதனையடுத்து மீண்டும் கடந்தஆண்டு ஏப்ரலில் ஜனாதிபதியைச் சந்தித்தோம். அப்போது தமது சுற்று நிருபத்தில் இருப்பதுபோன்று வேலை வாய்ப்புகள் விரைவில் தரப்படுமென்றார், ஆனால் அப்படி எதுவும் இதுவரை வழங்கப்படவில்லை.

ஜனாதிபதி நேசக்கரம் நீட்டும்போது நாம் அதனைப் புறக்கணிப்பதாக அரசாங்க எம். பிக்கள் குறை கூறுகிறார்கள். ஆனால் எமது கோரிக்கைகள் புறக்கணிக்கப்படும் போது நாம் எவ்வாறு நேசக்கரம் நீட்டமுடியும்? எம்மை நாமே ஆளும் நிலைவந்தால் இப் பிரச்னைகளுக்கு சுமுகமான தீர்வு காண முடியும்" என்றார். (கி)

## திருத்தம்

(கொழும்பு)

திருக்கேதீஸ்வரம் கடைவீதியில் மரணமானவர் கொழும்பு வெலிகம ஸ்ரோர் உரிமையாளரின் சகோதரர் என விசாரணையில் தெரியவந்துள்ளதாக 22-3-83 'ஈழநாடு' 6-ம் பக்கத்தில் வெளியான செய்தி தவறானதெனத் தெரிவிக்கப்படுகின்றது.

### காலத்துக்குக் காலம்

# யோகிகள், முனிவர்கள்

## தோன்றி வழிகாட்டுகிறார்கள்!

(மாவிட்டபுரம்)

"சைவசமயம் மிகவும் பழமை வாய்ந்தது. ஏனைய சமயங்களைவிட பெருமையுடன் மூல சமயமாகவும் விளங்குகிறது.

காலத்திற்குக்காலம் பல்வேறு யோகிகள், முனிவர்கள், அடியார்கள் தோன்றி எமக்குச் சைவசமயநெறிகளையும் போதித்து வழிகாட்டி வருகிறார்கள். ஆகவே நாம் அந்த நெறியில் எமது வாழ்வை அமைத்து சமய வாழ்க்கை வாழ முன்வரவேண்டும்.

இவ்வாறு அமெரிக்க சைவசித்தாந்த சபைத் தலைவர் ஸ்ரீசிவாய சுப்பிரமுனியசுவாமிகள் அண்மையில் குப்பிளான் ஏற்கரை கற்பக விநாயகர் ஆலயத்தில் தமக்களிக்கப்பட்ட வரவேற்பு வைபவத்தில்போது அருளுரையாற்றுகையில் கூறினார்.

ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு. கா. நல்லையா தலைமையில் ஆசிரியர் திரு. கமலாகரனின் வரவேற்புரையுடன் இவ்வரவேற்பு வைபவம் ஆரம்பமானது.

பல தெய்வங்களை நாம் வணங்குகின்றபோதும் அன்புமயமாக விளங்கும் இவனை வணங்குவதன் மூலம்தான் அருளைப்பெறமுடியும். சிவனே முழுமையான மேன்மையான கடவுள் ஆகும்.

ஆன்மாக்களிலிருந்து பிரிந்து வாழாத தெய்வம் சிவன். அவன் என்றும் நம்முடனேயே இருக்கிறான். இவன் பல வடிவங்களில் காட்சி தருகின்றபடியால் இவனை வழிபட்டாலே ஏனைய தெய்வங்களின் அருளைப்பெற முடியும்.

ஆலயத்திற்குச் சென்றால் பொறாமை, கோபம், வெறுப்பு போன்ற தீயகுணங்களை முதலில் விநாயகரிடம் ஒப்படைத்துவிட்டு அன்புமயமாகச் சிவனை அணுகவேண்டும். உலகம் பூராவும் இன்று சிவபக்தர்கள் அதிகரித்து வருகிறார்கள். சிவனை வழிபடுவதால் நல்ல புத்தி, ஆரோக்கியம், செல்வம் என்பன வளரும். எம்மைப் பற்றிய உள்ளுணர்வு வெளிப்படும்.

அமெரிக்க சைவசித்தாந்த சபையைச் சேர்ந்த பழனிசாமி உரையாற்றுகையில் கூறியதாவது:- இந்திய நாட்டைப் புண்ணிய பூமி எனக் கூறுகிறார்கள். ஆனால் நாம் இலங்கையைச் சிறந்த புண்ணிய பூமியாகக் கருதியே இங்கு அடிக்கடி வருகிறோம், நாம் சிவ வழிபாட்டில் மிகவும் தூய்மையுடன் ஈடுபடுகிறோம், சைவ சமயத்தைப் பின்பற்றுவதுடன் மதித்துப் போற்றியும் வருகிறோம், அத்துடன் உலகநாடுகளில் சைவ சமயத்தைப் பரப்புவதற்காகச் சைவசமய நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து விநியோகிக்கிறோம்.

ஆலயங்களை மையமாக வைத்து அவற்றின்மூலம் சமயத்தை வளர்த்து மக்களையும் நல்ல நெறியில் இட்டுச் செல்ல நாம் முயலவேண்டும். ஆலயங்கள் சிறுவர்களுக்காகவே அறிவு முதிர்ச்சியுள்ளவர்களுக்கு ஆலயம் தேவையில்லை எனச் சிலர்கூறுகிறார்கள். அது தவறு. சைவமதத்தவர்க்கு ஆலயங்கள் அவசியமானவை. எமது வாழ்க்கை மேலோங்குவதற்கு அவை வழிசமைக்கின்றன. நாயன்மார்கள் கோவில் வழிபாட்டில் ஈடுபட்டுத்தான் திருமுறைகளை நமக்குத் தந்தார்கள். யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த யோகர் சுவாமிகள்கூட ஆலய வழிபாட்டை வலியுறுத்தியுள்ளார். ஆகவே ஆலயங்களை நாம் பேணி வளர்த்து வழிபாடியற்றவேண்டும்.

ஸ்ரீ ஆறுமுகசாமியும் பேசினார். [இ]

# சுவீப்முடிவுகள்

(கொழும்பு)

24-ம் திகதி இழுக்கப்பட்ட 926-வது தேசிய லொத்தர் சீட்டிழுப்பு முடிவுகள் வருமாறு:

1-ம் பரிசு

**12 R 0405**

ரூபா 1,49,040-00

2-வது பரிசு

**11 L 0458**

ரூபா 55,890-00

3-வது பரிசு

**07 T 0457**

ரூபா 18,630-00

தலா ரூ 670 சதம் 68 பரிசுபெறும் 100 டிக்கட்டுகளின் விபரம்.

| | |
|---|---|
| 13 A 0743 | 13 A 0983 |
| 14 A 0066 | 15 A 0571 |
| 04 B 0351 | 06 B 0643 |
| 06 B 0867 | 10 B 0?40 |
| 15 B 0286 | 01 C 0308 |
| 07 C 0483 | 10 C 0297 |
| 14 C 0150 | 14 C 0928 |
| 16 C 0970 | 18 D 0419 |
| 07 E 0792 | 10 E 0620 |
| 13 E 0535 | 18 E 0613 |
| 03 F 0121 | 17 F 0697 |
| 04 G 0298 | 04 G 0386 |
| 10 G 0889 | 06 H 0769 |
| 07 H 0854 | 08 H 0098 |
| 03 J 0038 | 17 J 0927 |
| 06 K 0316 | 11 K 0476 |
| 17 K 0284 | 07 L 0363 |
| 09 L 0380 | 14 L 0719 |
| 17 L 0214 | 17 L 0917 |
| 07 M 896 | |
| 18 M 0735 | 03 N 0165 |
| 07 N 0059 | 11 N 0661 |
| 16 N 0140 | 01 O 0788 |
| 06 O 0553 | 10 O 0599 |
| 13 O 0088 | 01 P 0432 |
| 05 P 0946 | 08 P 0774 |
| 09 P 0435 | 14 P 0416 |
| 02 Q 0394 | 09 Q 0438 |
| 16 Q 0673 | 01 R 0164 |
| 03 R 0105 | 03 R 0472 |
| 05 R 0052 | 10 R 0281 |
| 15 R 0782 | 16 R 0719 |
| 17 R 0686 | 04 S 0788 |
| 09 S 0589 | 09 S 0861 |
| 09 S 0984 | 04 T 0788 |
| 08 T 0099 | 08 T 0915 |
| 11 T 0063 | 17 T 0112 |
| 17 T 0225 | 15 U 0912 |
| 07 U 0933 | 10 U 0758 |
| 11 U 0358 | 18 U 0996 |
| 07 V 0762 | 16 V 0971 |
| 01 W 0041 | |
| 07 W 0831 | 03 X 0849 |
| 04 X 0409 | 07 X 0304 |
| 11 X 0952 | 14 X 0018 |
| 03 Y 0301 | 05 Y 0472 |
| 06 Y 0778 | 08 Y 0609 |
| 10 Y 0611 | 18 Y 0397 |
| 03 Z 0151 | 03 Z 0373 |
| 06 Z 0479 | 07 Z 0096 |
| 07 Z 0866 | 08 Z 0012 |

(இவையாவும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

## வண்ணை வைத்தீஸ்வரன் தேர்த்திருவிழா

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் கோவில் தேர்த்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து அன்று மாலை 3-30 மணிக்கு மகோற்சவ தினங்களில் தொடர்ந்து சமயச் சொற்பொழிவு நிகழ்த்திய சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டியைக் கௌரவிக்கும் முகமாக திருக்கோயில் மண்டபத்தில் தேவஸ்தானத்தின் சார்பில் பாராட்டு விழாவொன்று நடைபெறவுள்ளது.

இப்பாராட்டு விழாவுக்கு யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமை வகிப்பார்.

இதனையடுத்து யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் "கண்ணனின் அருளுங்கோலம்" என்னும்பொருள்பற்றி சொற்பொழிவாற்றவுள்ளார்.

## கிராமோதய சபைத் தலைவர்

(புலோலி)

நாகர் கோவில் கிராமோதய சபைத் தலைவராக திரு ஆ நவரத்தினசாமி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நாகர் கோவில் இந்து இளைஞர் மன்றத் தலைவரான திரு நவரத்தினசாமி பருத்தித்துறை தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரவாளரும் சிறந்த சமூக சேவையாளருமாவார்.

## கலையரசு...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கொடையாளிகள் நிச்சயம் உதவிசெய்ய முன்வருவார்கள்.

தனது வாழ்நாள் முழுவதையும் நாடகக் கலைக்கே அர்ப்பணித்த ஒரு கலைஞனின் நினைவாகச் செய்யப்படும் நடவடிக்கைகள் ஆக்கலையின் வளர்ச்சிக்கும் முக்கியமான இடத்தை அளிக்கவேண்டும். அவைதான் அக்கலைஞனுக்கு நாம் செய்யும் உண்மைக் கைமாறும் ஆகும்.

எனவே, இது விடயத்தில் 'கலையரசு சொர்ணலிங்கம் நினைவுப் பணிக்குழு' வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கும் என எதிர்பார்க்கின்றோம்.

ப. யகேந்திரதாசன்,

சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்.

## 'காமினி' தந்தை காலமானர்

(கொழும்பு)

காணி, காணி அபிவிருத்தி மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு காமினி திசநாயக்காவின் தந்தை அன்றூ திசநாயக்கா காலமானர்

இவர் 1956ம் ஆண்டு தொடக்கம் 1970ம் ஆண்டு வரை சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் நுவரேலியாத் தொகுதி எம். பியாகப் பதவி வகித்தார். இக்காலத்தில் இவர் கலாச்சார அமைச்சின் பாராளுமன்றச் செயலாளராகவும் கடமையாற்றினர்.

இவர் திட்ட அமுலாக்கல் அமைச்சின் செயலாளர் டாக்டர் விக்கிரம வீரசூரியாவின் மாமனுருமாவார். (வெ)


# VRV

போக்குவரத்துச் சேவை வழங்கும்



# புதிய கடுகதி பஸ் சேவை!

## கொழும்பு - யாழ்ப்பாணம் - கொழும்பு

21-03-83 திங்கட்கிழமை முதல் நடைபெறுகிறது!

தினசரி இரவு 8-15 மணி கொழும்பு - யாழ்ப்பாணம்

தினசரி இரவு 8-00 மணி யாழ்ப்பாணம் - கொழும்பு

28 - 3 - 83 திங்கட்கிழமை தொடக்கம்

அச்சுவேலி - தொண்டமானறு - வல்வெட்டித்துறை - பருத்தித்துறை - நெல்லியடி- கொடிகாமம் - கொழும்பு சேவையையும் ஆரம்பிக்கவுள்ளோம்.

கொழும்பில் ஆசனங்கள் பதிவுசெய்யும் இடங்கள்:

V. R. V. ஸ்தாபனம், 271, செட்டியார் தெரு, கொழும்பு-11. தொலைபேசி இல. 32540 34800

கிறீன்லண்ட்ஸ் ஹோட்டல், பம்பலப்பிட்டி, தொலைபேசி இல. 85592 81986

அஜந்தாஹோட்டல் லிமிட், 125, ஓல்கொட் மாவத்தை, கொழும்பு-11 தொலைபேசி இல. 28089 32769

வீடியோ புளொசம், (சவோய் தியேட்டர் முன்பாக) காலி வீதி, வெள்ளவத்தை. தொலைபேசி : 83053

யாழ்ப்பாணத்தில் ஆசனங்கள் பதிவுசெய்யும் இடங்கள்:

V. R. V. ட்ரான்ஸ்போர்ட், சேகரம் கட்டிடம், 188/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல. 24162

றிக்கோ ஹோட்டல், 370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல. 22464 23889

Y. M. C. A. கச்சேரியடி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல. 23151

அச்சுவேலி-தொண்டமானறு-வல்வெட்டித்துறை-பருத்தித்துறை-நெல்லியடி -கொடிகாமம் ஊடாக கொழும்பு செல்லும் பஸ்ஸிற்கு ஆசனங்கள் பதிவு செய்யும் இடங்கள் :

அச்சுவேலி : ராஜ்கோ, பஸ்நிலையம், அச்சுவேலி. புறப்படும் நேரம்: 6-30

தொண்டமானறு : பிரபா அன் பிறதர்ஸ், ராஜா ஸ்ருடியோ, பெற்றோல் செட், தொண்டமானறு. புறப்படும் நேரம் : 6-45

வல்வெட்டித்துறை: ராஜி பான்ஸிபலெஸ், வல்வெட்டித்துறை, தொலைபேசி இல: 892. புறப்படும் நேரம் : 7-00

பருத்தித்துறை : ராஜன் சைக்கிள் வேக்ஸ், பருத்தித்துறை, தொலைபேசி இல: 574. புறப்படும் நேரம் : 7-30

நெல்லியடி : லட்சுமி ஸ்ரோர்ஸ், நெல்லியடி. புறப்படும் நேரம் : 8-00
மொடேர்ன் ஸ்ரோர்ஸ் நெல்லியடி. ,, ,, 8-00

கொழும்பிலிருந்து பஸ் புறப்படும் நேரங்கள் :

மாலை 7-15 மணி: வெள்ளவத்தை சவோய் தியேட்டர் முன்பாக
மாலை 7-30 மணி: பம்பலப்பிட்டி கிறீன்லண்ட்ஸ் ஹோட்டல்
மாலை 8-00 மணி: கோட்டை புகையிரத நிலையம் முன்பாக
மாலை 8-15 மணி: செட்டியார் தெரு கோவிலடி முன்பாக

- அண்மையில் இறக்குமதி செய்யப்பட்ட மூன்று புத்தம்புதிய சொகுசு பஸ்களை இச்சேவையில் ஈடுபடுத்தவுள்ளோம் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.
- வழமைபோல் காலை 6-00 மணிக்கு தினசரி எமது சேவை யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலைக்கும் நடைபெறுகின்றது.


## இடைக்காடு மகாவித்தியாலயத்தில் நடந்த பாராட்டும், பரிசில் வழங்கலும்

(யாழ்ப்பாணம்)

காலஞ் சென்ற பேராசிரியர் க. கைலாசபதியின் நினைவாக இடைக்காடு மகாவித்தியாலய மாணவர்களுக்கும் புலமைப் பரிசில் ஒன்றை வழங்கும் முகமாக பேராசிரியரின் மாமனர் திரு. மாணிக்கஇடைக்காடர் மேற்படி வித்தியாலயத்திற்கு நிதி வழங்கியுள்ளார் வருடா வருடம் மாணவர்களுக்கிடையில் நடைபெறும் பாரதி நினைவுப் பேச்சுப் போட்டியில் முதல் பரிசைப்பெறும் ஒரு மாணவனுக்கும் ஒரு மாணவிக்கும் பரிசில் வழங்குவதற்கு இந்நிதி பயன்படுத்தப்படும், இப்பரிசளிப்பு நிகழ்ச்சி வருடந்தோறும் பேராசிரியர் கைலாசபதி அமரத்துவம் அடைந்த தினத்தில் இடம்பெறும்.

ஒவ்வொருவருடமும் க. பொ. த. ப சாதாரண தரத்தில் திறமைச் சித்து பெறும் மாணவர்களுக்கும், க. பொ த. ப. உயர்தரம் விஞ்ஞானம்பிரிவில் இருந்து பல்கலைக் கழகத்திற்குத் தெரிவாகும் ஒரு மாணவருக்கும், ஒரு மாணவிக்கும் மாணிக்கஇடைக்காடர் தம்பதிகள் புலமைப் பரிசில்கள் வழங்கி வருகின்றனர்.

மேலும் க. பொ. த. ப. உயர்தரம் கலைப்பிரிவிலிருந்து பல்கலைக் கழகத்திற்குத் தெரிவாகும் மாணவர்களுக்கு திருமதி எலிசபெத் ஆறுமுகசாமி காலஞ்சென்ற ஆறுமுகசாமி ஞாபகார்த்த புலமைப் பரிசில் வழங்க முன்வந்துள்ளார்.

இடைக்காடு மகாவித்தியாலயத்தில் புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்ச்சியும் வித்தியாலய ஆரம்ப ஆசிரியர்களுக்கான பாராட்டு வைபவமும் அண்மையில் வித்தியாலய மண்டபத்தில் அதிபர் திரு. சி வே. மகேசவேலு தலைமையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினர்களாக நா. மாணிக்கஇடைக்காடர் தம்பதிகள் கலந்து கொண்டனர்

ஆரம்பகால ஆசிரியர்களின் உருவப்படங்களை திரு.மாணிக்கஇடைக்காடர் திரை நீக்கம் செய்துவைத்தார். யாழ். பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான மாணவருள் மு செல்வராசாவுக்கு மாணிக்கஇடைக்காடர் புலமைப்பரிசிலும், மாணவி ஆனந்தஈஸ்வரி ஆறுமுகத்துக்கு சிவமங்கலம் மாணிக்க இடைக்காடர் புலமைப்பரிசிலும் வழங்கப்பட்டது.

வித்தியாலய ஆரம்பகாலத்தில் கடமையாற்றிய 7 ஆசிரியர்களில் தற்போது வாழ்ந்து வரும் பண்டிதர் சு. இராமசாமி, திரு. எ. நாராயணசாமி, திரு.மு கந்தையா ஆகியோர் விழாவிற்கு அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

இவ்விழாவில் அதிபர் திரு. மகேசவேலு தமது தலைமை உரையில் கூறியதாவது:- வித்தியாலயத்தின் வளர்ச்சியில் பாடசாலை அபிவிருத்திச் சங்கமும், பழைய மாணவர்சங்கமும் காட்டிவரும் அக்கறையைப் பாராட்டியடுடன் பாடசாலைக்கு மூன்றுமாடிக் கட்டிடத்தை அன்பளிப்புச் செய்த திரு. வே. தமசிவாயம் அவர்களினதும், வித்தியாலயத்தில் 10ம், 12ம் தரங்களில் விஞ்ஞானக் கல்விகற்கும் மாணவர்கட்குப் புலமைப் பரிசில் வழங்குவதற்கான நிதியை நன்கொடையாக அளித்த திரு. நா. மாணிக்கஇடைக்காடர் தம்பதிகளினதும் 12ம் தரம் கலைத்துறையில் பயிலும் மாணவர்களுக்கான புலமைபரிசில் வழங்குவதற்கான நிதியை நன்கொடையாக அளித்த திருமதி எலிசபெத் ஆறுமுகசாமி அவர்களினதும் சேவையைப் பாராட்டிப்பேசினர்.


திரு.மாணிக்கஇடைக்காடர் தமது உரையில் கல்விமான்கள் ஆராய்ச்சிகளில் பேரின்பம் காண்பவர்கள் அறிவு சம்பந்தமான ஆய்வுகள் அவர்களின் இனிய பொழுதுபோக்கு இப்படியான ஆய்வுகளில் ஈடுபட்டுத்தமது நேரம் போவதே தெரியாமல் செந்தமிழ்தொண்டாற்றியவர் அமரர் கைலாசபதி அவர்கள். அவருடைய வாழ்க்கையிலே சொல்லுக்கும் செயலுக்குமிடையே நெருங்கிய தொடர்பிருந்ததை நாம் நன்கு அறிவோம் என்றார்.

சொல்வீரராக மாத்திரம் வாழாது செயல்வீரர்களாகவும் மாணவர்கள் திகழவேண்டும். பேரறிஞர் கைலாசபதி போன்றவர்கள் இவ்வழியில் வாழ்ந்து வரும் இளம் சந்ததியினர்க்கு நல்ல வழிகாட்டிகளாய் விளங்கினர். அமரர் கைலாசபதி மகாகவி பாரதியாரிடம் கொண்ட ஈடுபாடு சொல்லும் தரத்தன்று. பாரதியாரே அவரின் உயிராகவும் பற்றுக்கோடாகவும் விளங்கினர்'' எனக்கூறினர்.

## ஏழாலைக் கிராமோதய சபைத் தலைவர்

(யாழ்ப்பாணம்)

ஏழாலைக் கிராமோதய சபை தலைவர் தெரிவு ஏழாலை மகா வித்தியாலய மண்டபத்தில் ஏழாலை விசேஷ சேவை உத்தியோகத்தர் திரு பூ விஜயகாந்தன் தலைமையில் நடைபெற்றது.



சுன்னகம் ப. நோ.கூட்டுறவுச்சங்கத்தில் கணக்காளராகக் கடமையாற்றும் திரு கந்தையா மகாதேவன் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

ஏழாலை முத்தமிழ் மன்றப் பொதுச் செயலாளராகவும், தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலை இயக்குநராகவும், யாழ். மாவட்ட சனசமூக நிலைய ஒன்றியத்தின் உபதலைவராகவும், சுன்னகம் ப. நோ.கூ. சங்க ஊழியர் நலன்புரிச்சங்கச் செயலாளராகவும் இருந்து வரும் இவர், மற்றும் பல நிறுவனங்களிலும் பொறுப்பான பதவிகளைவகித்து வருகிறர்.

## அத்திபாரக்கல் நாட்டினர்

(யாழ்ப்பாணம்)

சித்தன்கேணியில் கம்பியூட்டர் வகுப்புக் கூடமொன்றை அமைப்பதற்கான அத்திபாரக்கல்லை சர்வதேச லயன்ஸ் கழக இலங்கைத் தலைவர் டாக்டர் ஆரியம் நல்லையா நாட்டி வைத்தார்.

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத் தலைவர் திரு இ.விஜயரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் யாழ் அரசாங்க அதிபர் திரு தேவநேசன் நேசையாவும் கலந்து கொண்டார்.

(வெ)

## திருக்குளிர்ச்சி திருநன்னீராட்டல் ஆராதனைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். வண்ணை கன்னாதிட்டி அருள்மிகு காளியம்பாள் ஆலயத்தில் திருக்குளிர்ச்சி திருநன்னீராட்டல் ஆராதனைகள் எதிர்வரும் திங்கட்கிழமை பகல் இடம்பெறவுள்ளன.


**மனோகரா** தினசரி 5 காட்சிகள்
(யாழ். நகர்)
VINCENT PRICE
in
THEATRE OF DEATH
(Adults-Color-Scope)

**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
எஸ். எஸ். ஆர். நடித்த
கல்யாணிக்கு கல்யாணம்

**வெலிங்லி** (மானிப்பாய்)
தினசரி- 4-15 7-00
சனி. ஞாயிறு 1-3
சிவாஜி-
மோகனப்புன்னகை


## இன்றைய பலன்

பங்குனி மாதம் 12-ம் திகதி

சனிக்கிழமை

(26—3—83)

**மேடம்:** பூமியால் லாபமுண்டு, புத்திரர் புகழும் குவியும் பொதுசனத் தலைமைக்கான வாய்ப்புக் கிடைக்கும் தக்க சமயத்தில் தந்தையின் ஆதரவு தப்பாமல் கிடைக்கும்.

**இடபம்:** சொகுசான வாழ்க்கையை விரும்புவீர்கள் ஆடம்பரமான ஆடைகளில் மன நாட்டம் செல்லும் படித்தவர்களின் தொடர்பினால் பயன் அடைவீர்கள் எல்லாம் இன்பமயம்.

**மிதுனம்:** அதிர்ஷ்ட தேவதையின் அணைப்பு உங்களுக்குக் கிடைக்கும் திரைப்படத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு உற்சாகமளிக்கக் கூடும் பொன்னான தினம்.

**கடகம்:** பணம் பறிபோவதற்கு இடம் ஏற்படலாம் முகமன் பேசுவோர் விடயத்தில் முன்னெச்சரிக்கையுடன் இருக்கவும் அதிக சிந்தனைக்கு இடமளிக்கக் கூடாவாம்.

**சிங்கம்:** மனக்கோட்டை கட்டுவீர்கள் எதிர்பார்த்ததில் ஏமாற்றம் விளையும் அன்புச் சகோதரத்தின் உடல் நலம் பாதிக்கப்படலாம்.

**கன்னி:** மேடைப் பேச்சாளர்களும் நடிகர்களும் பெரும் புகழ் அடைவர் பொருள் வரவுக்கு இடமுண்டு இலைத்தில் திருப்திகரமானநிலை தென்படும் அந்தஸ்து உயரும்.

**துலாம்:** வெளியிடத்து பயணம் வேதனையைத் தரலாம் வேண்டாத உறவுகளை துண்டித்தல் நன்று அபிப்பிராய பேதம் தோன்றக்கூடும் அமைதியுடன் இருக்கவும்.

**விருச்சிகம்:** பொன்னான சந்திப்பு இன்று கிடைக்கும் திறமைக்கு முதலிடம் உண்டு பெரியவர்களின் ஆதரவு கிடைக்கும் இதயச்சுமை அகலும் வாகன சுகமுண்டு.

**தனு:** புண்ணிய காரியங்களில் அதிக ஈடுபாடு ஏற்படும் பொதுத்துறையில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள் இலைத்தில் இனிமைக்கு இடமுண்டு.

**மகரம்:** சினேகிதவழியாகக் கவலைகள் தோன்றும் திடீர் முடிவுகளைத் தவிர்ப்பது நன்று தம்பதியின் ரேகை படரும் வரவில் மிஞ்சிய செலவு அதிகரிக்கும்.

**கும்பம்:** கருத்தொருமித்த காதலர் வாழ்வில் மறக்க முடியாத நிகழ்ச்சி இடம்பெறும் இனிமையான சம்பவங்களுக்கு இடமுண்டு இன்று நல்லநாள்.

**மீனம்:** எதிலும் சோர்வு தென்படும் ஆதரவு காட்டியவர்கள் உங்களை அலட்சியப் படுத்துவார்கள் நண்பர்களின் தொல்லைகளால் பண நெருக்கடி உருவாகும்.

சோதிடக் கலாநிதி
**திருமலை**
**க. வேலுப்பிள்ளை.**

## உதைபந்தாட்டம்: இன்று இறுதி ஆட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவின் ஆதரவில், யாழ்ப்பாண விளையாட்டுக் கழகங்களிடையே நடைபெற்ற, உதைபந்தாட்டப் 'நொக்கவுட்' போட்டியின் இறுதியாட்டம் இன்று யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இன்று நடைபெறும் இறுதியாட்டத்தில், நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழகமும், குருநகர் 'பாடும் மீன்' விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன. இப்போட்டிக்கான சகல ஏற்பாடுகளையும், விளையாட்டு உத்தியோகஸ்தர் கே. டபிள்யூ விமலராசா மேற்கொண்டுள்ளார்.

## 'எல்லே'ப் போட்டி

யாழ்ப்பாண விளையாட்டுக் கழகங்களிடையே, மேற்படி மைதானத்தில்நாளை 'எல்லே' போட்டியும் நடைபெற இருப்பதாகத் தெரியவருகிறது. [வி]

## யாழ். மத்திய கல்லூரிசாம்பியன்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கல்வி வட்டாரப் பிரிவுகளிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில், யாழ். மத்திய கல்லூரியும், நாவாந்துறை மகாவித்தியாலயமும் சாம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

13-வயதுக்குட் பட்டவர்கள் பிரிவில் நடைபெற்ற இறுதியாட்டத்தில், நாவாந்துறை மகாவித்தியாலயம், குருநகர் சென். ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தை 2-0 கோல்களால் வெற்றி பெற்றது.

15-வயதுக்குட் பட்டவர்கள் பிரிவில் நடைபெற்ற இறுதியாட்டத்தில், யாழ். மத்திய கல்லூரி, ஒஸ்மானியாக் கல்லூரியை 1-0 கோல்களால் வெற்றி பெற்றது.

இவ் இறுதியாட்டத்துக்கு யாழ்ப்பாண உடற் பயிற்சிக் கல்வி அதிகாரி திரு. வி. கணேசலிங்கம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு, சாம்பியன் கோஷ்டிகளுக்கு பரிசில்களை வழங்கினார். [வி]


**றீகல்** [யாழ். நகர்] 26ம் திகதி சனி முதல் தினசரி 4 காட்சிகள்
ஜெமினி கணேசன்-சரோஜாதேவி-தங்கவேலு
மற்றும் பலர் நடித்த
ஸ்ரீதரின் வெள்ளிவிழாச் சித்திரம்
**கல்யாண பரிசு**
[புதிய பிரதி]
குடும்பத்துடன் கண்டுகளிக்கவேண்டிய ஓர் காதல்காவியம். (குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்)

**சாந்தி** (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி
தேவிகா
**நீலவானம்**
(புதிய பிரதி)

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
**என் அண்ணன்**

**லிடோ** (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
அனுபவம்புதுமை

**ராஜா** (யாழ்- நகர்) தினசரி 10-00, 2-00, 6-00, 9-30
**துணிவே துணை**

**ஸ்ரீதர்** (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30, 6-30, 9-30
சிவாஜி, சரிதா, ஜெய்சங்கர் நடித்த
**கீழ்வானம் சிவக்கும்**
[கலர்]

**ராணி** (யாழ். நகர்) தினசரி 10-00, 2-00, 6-00, 9-30
எம். ஜீ. ஆர். - ஜெயலலிதா
**தேடிவந்த மாப்பிள்ளை**
(ஈஸ்ட்மன் கலர்) (புதிய பிரதி)

தென்னிந்திய ரசிகர்கள் 100 நாட்களுக்கு மேல் கண்டு களித்த தீந்தமிழ் திரையோவியம்!
**வின்ஸர்** (யாழ் நகர்) தினசரி 4 காட்சிகள்
சிவகுமார்-சரிதா- சில்க் சுமிதா-சுருளிராஜன்
**வண்டிச்சக்கரம்**
(வண்ணக் கலர்)


## பட்மிட்டன்ட் கால் இறுதிக்கு பிரவேசம்

லண்டன், மார்ச், 25

இந்திய 'பட்மிட்டன்ட்' வீரரான பிரகாஷ்படுகோனே இங்கிலாந்து பட்மிட்டன்ட் போட்டிகளில் கலந்துகொண்டுள்ளார்.

இவர் இங்கிலாந்து வீரர் ஒருவரை 15—3, 15—6 என்ற ரீதியில் தோற்கடித்தார். இதன் மூலம் கால் இறுதிப் போட்டிக்கு படுகோனே பிரவேசித்துள்ளார். (இ)

## பத்திரகாளி உற்சவ ஆராதனை

[யாழ்ப்பாணம்]

அரியாலை மேற்கு கலைமகள் வீதி ஸ்ரீபத்திரகாளி அம்மன் வருடாந்த உற்சவமும் ஆராதனையும் இம்மாதம் 28ம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

27ம் திகதி இரவு அரியாலையூர் கவிஞர் திரு வே.ஐயாத்துரை வழங்கும் அப்பாள் துதியும் தொடர்ந்து இன்னிசை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

## கரபந்தாட்டச் சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

ஈச்சமோட்டை இளைஞர் கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் கரபந்தாட்ட போட்டியின் முதலாவது வட்டசுற்றுப் போட்டிகள் யாவும் கடந்த 20-ம் திகதி முடிவு பெற்றன. இரண்டாவது வட்ட சுற்றுப் போட்டிகள் இன்றும். நாளையும் நடைபெறவுள்ளன.

பின்வரும்கோஷ்டிகள் 2-வது வட்ட சுற்றுப் போட்டியில் பங்குபற்ற தகமை பெற்றுள்ளன. பாஷையூர் சென். அன்ரனிஸ் யுத் வி. க, ஜன சக்தி வி. க. சிறுப்பிட்டி நீர்வேலி, ஈச்சமோட்டை இளைஞர் வி. க, மானிப்பாய் வி. க, திருநெல்வேலி அம்பாள் வி. க, ஏழ்பி, பிரிவுகள், நவஜீவன்ஸ் வி. க. உடுப்பிட்டி.

அரை இறுதிப்போட்டி 28-ம் திகதியும், இறுதிப் போட்டி ஏப்ரல் 2-ம் திகதியும் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளுக்கான சகல ஏற்பாடுகளையும் டீ ஏ, எம். குணசிங்கம், திரு. எஸ். ஜனகன் ஆகியோர் கவனித்துவருகிறார்கள். (இ)

## தமிழ்த் தினவிழா

(யாழ்ப்பாணம்)

புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தில் தமிழ்த்தின விழா கல்லூரி திறந்த வெளி அரங்கில் அதிபர் சங்கைக்குரிய செல்வி அன்ரனீனு தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் சிறுவர்களின் பேச்சு, இசை, நடனம், நாடகம் ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

கல்லூரி அதிபர் தம்முடன் ஒத்துழைத்தவர்களுக்கு இவ் விழாவில் நன்றி தெரிவித்து உரையாற்றினார்.


## தொழிலாளி இயக்க வரலாறு

''தன் இயக்கத்தின் வரலாற்றை அறியாத தொழிலாளி, தன் இனம் அறியாது, தான் எங்கிருந்து வந்தான் என்பதைத் தெரியாது. தான் எங்கு செல்கிறான், என்ன வழிபோகிறான் என்பதை உணராத மனிதன் போன்றவன் ஆகிறான்'' என்று மாமேதை லெனின் கூறினார்.

இவ்வரலாற்றை அறிய புரட்சிகர இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவரான தோழர் த. துரைசிங்கம் எழுதிய **'லெனினும் ஆசியாவும்'** என்ற நூலைப் படியுங்கள்.

இந்நூல் கிடைக்குமிடம்:
**மக்கள் பிரசுராலயம்**
46, சிவன்கோவில் வடக்கு றோட், யாழ்ப்பாணம்
மற்றும் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.
விலை ரூபா 10/-
சோஷலிஸ ஆய்வுக்கழகம்,
31, விகசன் வீதி, கொழும்பு-12. (6656)



# ★ யாழ்-கொழும்பு இந்துக்கல்லூரிகள் இன்று மோதுகின்றன ★



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரிக்குமிடையிலான கிரிக்கெட் போட்டி இன்று ஆரம்பமாகிறது.

யாழ். இந்து மைதானத்தில் இன்றும் நாளையும் கிரிக்கெட் போட்டி நடைபெறும்.

இந்த ஆண்டில் யாழ் இந்து கிரிக்கெட் கோஷ்டி வடபகுதியில் ஆறு போட்டிகளில் கலந்து கொண்டு ஒன்றிலும் தோல்வி காணாத கோஷ்டியாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

யாழ் இந்துக் கல்லூரியின் ஆட்டக்காரர் விபரம்: (படத்தில் இடமிருந்து வலமாக) வருமாறு: வை. ஜெயந்தன் (காப்டன்) எஸ். ரூபானந்தசிவம் (உதவிக் காப்டன்) எஸ். தவேந்திரன், என். சரவணபவன், எஸ். பகீரதன், ரி. அன்பன், பி. கௌரிசங்கர், எம். வாசுதேவா, எம். விக்னேஸ்வரராஜா, எம். ஜெயகுமார், எம். திலீபன், ரி. ரத்தினராஜா, பி. கோபிநாத், எஸ். செல்வகுமார், என். ரவீந்திரன், சி. பிரபாகரன்,

## வடபகுதி...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பி. திரு. எம். சிவசிதம்பரம், எதிர்க்கட்சித்தலைவரின் செயலாளர் திரு. ஆர். பேரின்பநாயகம் ஆகியோர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

வெளிநாடுகளுக்கு நமது பொருட்களை அனுப்பும் முக்கிய ஏற்றுமதியாளர்கள் இக்கூட்டத்தில் பிரசன்னமாயிருந்தார்கள்.

வடபகுதி விவசாய உற்பத்திப்பொருட்களின் தரம், தன்மைகளை வெகுவாக அரசாங்க அதிபர் விபரித்து விளக்கினார்.

எதிர்க்கட்சித்தலைவர் திரு. அமிர்தலிங்கம் பேசுகையில், ஏற்றுமதியாளர்கள் கைகொடுத்து உதவும் பட்சத்தில் வடபகுதி விவசாயிகளுக்குப்பெருத்த அதிர்ஷ்டம் காத்திருக்கிறது என்றார்.

வடபகுதி உற்பத்திகளை ஏற்றுமதி செய்யும் திட்டத்தின் அடுத்த கட்டமாக ஏப்ரல் 24ம் திகதி ஏற்றுமதியாளர்கள் வடபகுதி விவசாயிகளை திருநெல்வேலி விவசாயக் கல்லூரியில் எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம் தலைமையில் சந்தித்துப் பேசி, முக்கியமான முடிவை எடுக்க, யாழ் அரசாங்க அதிபர் ஏற்பாடுகளைச் செய்துள்ளார். (இ)


## ரூபவாஹினியில் இன்று

மாலை 6-00 இன்றைய நிகழ்ச்சிகள்.

6-01 கார்ட்டூன் சித்திரம்.

6-15 விளையாட்டு நிகழ்ச்சி.

6-30 கல்வி நிகழ்ச்சி (சிங்களம்)

7-00 செய்தி மஞ்சரி (தமிழ்)

7-15 பேராதனை அரச பூங்கா பற்றிய நிகழ்ச்சி.

7-45 அவுஸ்திரேலியா-நியுஸிலாந்து டெஸ்ட் மூன்றும் நாள் ஆட்டம்.

8-15 செய்திமஞ்சரி (சிங்களம்)

8-30 கலைநிகழ்ச்சி (சிங்களம்)

9-00 'ஆசியாட்' பந்தயங்கள்

9-30 செய்திமஞ்சரி (ஆங்கிலம்)

9-45 'ஆசியாட்' பந்தயத் தொடர்ச்சி



## லொறிகள் தேவை

முருகண்டியிலிருந்து ஆற்றுமண் கொண்டு வருவதற்கு உடனடியாக லொறிகள் தேவை. தொடர்பு கொள்ளவும்

A. S. ராசநாயகம், சேவந்தி மோட்டோர், 100/4 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 6657


## இதுவரை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

துப் பேசினார். பிரதி அமைச்சர் தொடர்ந்து பேசுகையில், பல்கலைக்கழக மாணவர்களை இடதுசாரிகள் தவறான வழியில் கொண்டு செல்கிறார்களென்றும், ரோகண விஜேவீர சரத் முத்தெட்டுவேகம போன்றவர்களே இவ்விதமாக மாணவர்களை இழுத்துச் செல்கிறார்களென்றும் அவர் குற்றஞ் சாட்டினார். [இ]

## நாளை வாரியார் விரிவுரை

(அரியாலை)

அரியாலை சித்தி விநாயகர் கோவிலில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை திருமுருக கிருபானந்த வாரியார் "திருநாளைப்போவார்" என்னும் பொருள்பற்றி விரிவுரை நிகழ்த்துவார். [ப]

## கத்தியால் குத்திக் கொலை!

(யாழ்ப்பாணம்)

பழைய பகைமை காரணமாகக் கத்திக்குத்துக்கு ஒருவர் பலியானார்.

செல்வரத்தினம் கபிரியேல் (28 வயது) என்பவரே கத்திக் குத்துக்குப்பலியானவராவார்.

யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதியிலுள்ள சுண்டுக்குளி சனசமூக நிலையமுன்பாக இச் சம்பவம் நடைபெற்றது.

சைக்கிளில் சென்ற இருவர் சைக்கிளில் வந்து கொண்டிருந்த கபிரியேல் என்பவரை கத்தியால் குத்திவிட்டு தலைமறைவாகிவிட்டனராம்.

இறந்தவரின் சடலம் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி பிரேத அறையில் விசாரணைக்காக வைக்கப்பட்டுள்ளது. (மா)

## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலய பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பண பொதுக்கூட்டம் அதிபர் செ. தேவதாசன் தலைமையில் எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் நடைபெறவுள்ளது.

## விடுதலை

[யாழ்ப்பாணம்]

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட 'தமிழன்குரல்' பத்திரிகை ஆசிரியர் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 21ம் திகதி இந்தியாவிலிருந்துவந்த 'மக்கள் பாதை' புத்தகம், மற்றும் வாழ்த்து மடல்கள் விற்பனை செய்து கொண்டிருந்தபோது இவர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார். நான்கு நாட்களாக விசாரணை செய்யப்பட்டபின்னர் விடுதலை செய்யப்பட்டார். [மா]

## தொழில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

அரசதரப்பில் உணவுகூட்டுறவு பிரதி அமைச்சர் திரு. சந்திரா ராஜகருணா பதிலளித்தார்.

தொழில் வங்கி முறையை ஒழிப்பது குறித்து சகலகட்சிகளும் இணக்கமான ஒரு முடிவுக்குவந்தால் அவ்வாறு செய்வது பற்றி அரசு ஆலோசிக்கும் என்று கூறினார்.

## அமிருக்கு கடிதம்

[யாழ்ப்பாணம்]

இளமைப்பருவம் முதல் தமிழரசுக் கட்சிக்காக உழைத்த பேச்சாளரும், எழுத்தாளரும், சட்டத்தரணியுமான திரு எஸ். நடராஜா (கரிகாலன்) வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி. யாக நியமிக்காததை வன்மையாகக் கண்டிப்பதாக பண்டத்தரிப்பைச் சேர்ந்த திரு சா. செ. அப்பிராபதி எதிர்க்கட்சித்தலைவர் திரு அ. அமிர்தலிங்கத்திற்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார். [வெ]

## நல்லூரில் வாரியார்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பாணன் குளம் நாச்சி அம்பாள் ஆலய 12-வது அலங்கார உற்சவத்தையொட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் அருள்மொழி அரசு கிருபானந்தவாரியார் சுவாமிகளால் 'அன்னை மீனாட்சி' என்னும் பொருள் பற்றி சங்கீத கதாப்பிரசங்கம் நடத்துவார். (க)

## மரண அறிவித்தல்

### ஜானகிதேவி தம்பித்துரை

பண்டத்தரிப்பைச் சேர்ந்த ஜானகிதேவி தம்பித்துரை காலமானார். இவர் A R தம்பித்துரை A D R. (மேலதிக காணிப்பதிவாளர், யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும், கலாவதனி (ஆஸ்திரேலியா) சந்திரசேனன் ஆகியோரின் தாயாரும், நிச்சாட் (ஆஸ்திரேலியா) அவர்களின் மாமியாரும், ராஜேந்திரம், காலஞ்சென்ற் அன்னலட்சுமி, தம்பிஐயா, முத்தையா ஆகியோரின் சகோதரியும், கப்ரின் அதிபர், சுகிர்தா என்போரின் அன்ரியும், முத்தம்மா ஜொக்கீமின் மருமகளுமாவர். நல்லடக்கம் 27-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை பி. ப. 4-00 மணிக்கு பண்டத்தரிப்பில் நடைபெறும். 6676


## தொழிலாளர் தேவை

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் வேலைசெய்யத் தொழிலாளர்கள் தேவைப்படுகிறார்கள். உடனடியாக ஊறணி புனித அந்தோனியார் கிராம அபிவிருத்திச் சங்க அலுவலகத்தில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளவும்.

6666



விரையுங்கள்! அரிய சந்தர்ப்பம்!!

மாதக் கடைசி வார விற்பனை!

# ஆர்பிகோ மெத்தை வகைகள்

## 10 % கழிவு

(ரூபா 140/- இருந்து ரூபா 1100/- வரை)

மற்றும்

✯ உருக்கு தளபாடங்கள் ✯ பிளாஸ்ரிக் பொருட்கள்

பொதுமக்கள் நன்மை கருதி

இன்றும் நாளையும் விற்பனை நிலயம் திறந்திருக்கும்

டிரான்ஸ் லங்கா மாக்கெட்டிங் லிமிட்.,

இல. 1, புதிய நவீன சந்தை (முதலாவது மாடி)

யாழ்ப்பாணம். போன் : 23027


## மரண அறிவித்தல்

### பொ. ஆனந்தலிங்கம்



காலஞ்சென்ற டாக்டர் ச. பொன்னம்பலத்தின் அன்பு மகன் ஆனந்தலிங்கம் சவூதி அரேபியாவில் அகால மரணமானார். இவர் திருமதி பொன்னம்பலத்தின் அன்பு மகனும், சுந்தரலிங்கம், சொர்ணலிங்கம், கணேசலிங்கம், சர்வகுணதேவி, பஞ்சலிங்கம் ஆகியோரின் அன்பு சகோதரனும், முனியய்யா சண்முகநாதனின் மைத்துனரும், புவனேஸ்வரியின் அன்புக்கணவரும், வடிவேலு தம்பதிகளின் மருமகனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 27ம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4-0 மணியளவில் அவரது இல்லத்தில் (46 புங்கன்குளம் வீதி) இருந்து கோம்பையன் மணல் மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

திருமதி. க. பொன்னம்பலம்

(6677)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983—ம் ஆண்டு மார்ச் மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number Q. B. 100236/81. Eelanaadu - P. O. Box: 49, Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.